118

உ

சிவ சிவ

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

அருளிச் செய்த

# காசிக் கலம்பகம்

(மூலமும் அரும்பதக் குறிப்பும்)

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்

279ஆம் ஆண்டு

மகேசுவர பூசை வெளியீடு

26—5—1967

0-,17MKU,K
N67
181836

:: திருப்பனந்தாள்

# சிறப்புப் பாயிரம்

திருமக ளகலாப் புரமவை சூந்த
நன்னக ருதித்த செந்நெறிக் குரிசில்
ஐந்தெனும் பருவம் வந்துறு மளவும்
மழக்குண மொருவி மிழற்றிடாச் செம்மல்
செந்திலம் பதிவாழ் கந்தன தருளால்
ஓதா துணர்ந்த போதனுய் முன்னர்க்
கலிவெண் பாவெனு மொலிபெறு மலங்கலக்
குகன்றிரு முடி தனக் குகந்திடச் சூட்டிப்
பிள்ளைக் கவி முதல் வெள்ளைக் கிழத்தி
மாலையீ ருகச் சால்பமை பிரபந்தம்
முந்நான் கியற்றித் தன்னுஞ் சமய
நிலையையுங் காட்டி யுலைவிலா தியாரும்
தீதெலா மொருவி நீதியே புரிய
நீதிநெறி விளக்கமென் றேதமில் பனுவலும்
இயற்றின னில்லறந் தியக்குறு நிலையென
இளமையிற் றுறந்து வளமைசேர் தருமை
மாசிலா மணியெனுந் தேசுறு குரவன்
பதமலர் பழிச்சுமற் புதகுண குமர
குருபர னெனும்பெயர் மருவிய முனியே.

உ

சிவ சிவ

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

# காசிக் கலம்பகம்

## (மூலமும் அரும்பதக் குறிப்பும்)

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

**அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்**

அவர்களின் திருவுள்ளப் பாங்கின் வண்ணம்

ஸ்ரீ காசிமடத்து இளவரசு

**வித்துவான்**

**ஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான்**

அவர்களால்

வெளியிடப் பெற்றது.

**ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்**

**279ஆம் ஆண்டு மகேசுவர பூசை வெளியீடு**

26—5—1967

ஸ்ரீ காசிமடம் : : திருப்பனந்தாள்

118/267

விலை ரூ. 0·40

இதன் விற்பனைத் தொகை ஸ்ரீ வைகுண்டத்தினின்று வெளிவரும் குமரகுருபரன் பத்திரிகையைச் சாரும்.

0-7,17 MKU,K
N67

இந்நூல் கிடைக்கும் இடம் :

திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை அவர்கள் B.A., B.L.,

நிரந்தரத் தலைவர், ஸ்ரீ குமரகுருபரன் சங்கம்,
மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்,
ஸ்ரீவைகுண்டம் (திருநெல்வேலி ஜில்லா)

181836

Kabeer Printing Works, Madras (663)

உ

சிவ சிவ

# பதிப்புரை

"மழகளி றீன்றவள் அம்பதியே
வாழ்வது காசி வளம்பதியே."

கலம்பகம் என்பது 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பலவகை மலர்களும் கலந்தமைந்த கலம்பக மாலை என்று டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் பொருள் விரிப்பர். கலம்பகத்தில், பல்வகைப் பொருள்களும் அகப்புறத்துறைகளிற் பலவும், பல்வகையாப்புக்களும் விரவிக் கலந்து வரும். இதில் பதினெட்டு உறுப்புக்கள் இருக்கும். அவ்வுறுப்புக்கள்,

"வைக்கும் புயம்தவம்வண்(டு) அம்மனை பாண்மதங்கு
கைக்கிளைசித்(து) ஊசல் களிமடக்(கு)ஊர் — மிக்கமறம்
காலம் தழையிரங்கல் சம்பிரதம் கார்தூது
கோலும் கலம்பகத்தின் கூறு"

என்ற வெண்பாப் பாட்டியல் வெண்பாவான் அறியப் பெறும். இவையே யன்றிப் பிச்சியார் மதங்கியார் கொற்றியார் முதலியனவும் வரப்பெறும். ஒரு போகு அல்லது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, வெண்பா, கலித்துறை ஆகிய மூன்றும் கலம்பகத்தில் முதலில் வரும். பின்னர்ப் புயவகுப்பை முதலாகவுடைய மேற்சொல்லிய பதினெண்பொருட் கூறுபாடுகளும் வர, அந்தாதித் தொடையான் கலம்பகம் பாடப்பெறும். தேவர்க்கு ஆயின் குறைந்த பக்ஷம் நூறு பாடல்கள் பாடப்பெறும்.

இவ்வகைத்தாய கலம்பகங்களுள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பாடிய கலம்பகங்கள் மூன்றும் : (1) கயிலைக் கலம்பகம் (2) மதுரைக் கலம்பகம் (3) காசிக்கலம்பகம். **கயிலைக் கலம்பகம்** தம்மூராகிய கைலாசபுரத்து ஸ்ரீ கைலாசநாதர் மீது பாடப் பெற்றது. (இந்நாளில் அந்நூல் கிடைத்திலது). பின்னர் மதுரைக்கு எழுந்தருளியபொழுது **மதுரைக் கலம்பகம்** பாடப்பெற்றது. ஸ்ரீ காசியில் தங்கியிருந்தபொழுது அருளப்பெற்றதே **காசிக்கலம்பகம்.** கலம்பக வுறுப்புக்கள் எல்லாமும் செறிந்து விளங்குவது இந்நூல்.

பிச்சியார் என்பது தவக்கோலங்கொண்ட சைவ சமயப்பெண் பாடுவதாக அமைவது (செ. 16). **கொற்றியார்** என்பது வைணவ வேடம் பூண்டவள் கூறுவதாக அமைவது (செ. 22). பாட்டுடைத் தலைவனது ஊரைச் சிறப்பிப்பது **ஊர்** (செ. 32 ; 71). இரசவாதம் செய்யும் சித்தர் ஒருவர் கூற்றாக அமைவது, **சித்து** என்பது (செ. 37). **களி** என்பது கள்ளுண்பான் ஒருவன் தன் வழக்கத்தைச் சிறப்பித்துக் கூறுவது (செ. 40). **குறத்தி** குறி கூறுவது, **குறம்** (செ. 43). **மறம்** என்பது தன் மகளை மணம் செய்ய விரும்பித் திருமுகம் விடுத்த அரசனின் தூதனைப் பார்த்துச் சினந்து மறவர் தலைவன் கூறுவதாக அமைவது (செ. 45). **மதங்கியார்** என்பது வாளெடுத்துக் கூத்தாடுவாளைப் பார்த்துக் கூறுவது (செ. 51). அருள் பெற்றுப் பெருஞ்செல்வம் பெற்ற பாணன் ஒருவன், தனக்கு அருள் செய்தவரிடம் செல்லுமாறு மற்றொரு பாணனுக்குக் கூறுவது, **பாணாற்றுப் படை** (செ. 58). (இந்நூலிற் கண்டது சிறு பாணாற்றுப் படையாகும்). பிறரால் இயற்ற முடியாத அரிய செயல்களைத் தான் செய்வதாக அமைப்பது, **சம்பிரதம்** (செ. 73). **மகளிர் அம்மானையாடுவதற்குரிய** முறையில் அமைவது,

**அம்மானை** (செ. 34). ஊசல் ஆடுவதற்குரிய முறையில் அமைந்த செய்யுள், ஊசல் (செ. 52). இவ்வுறுப்புக்களுக் கெல்லாம் இலக்கியமாக இந்நூலில் உள்ள செய்யுட்கள் சொற்சுவை பொருட்சுவை தோய்தரவுள்ளன. **மடக்கு** என்ற சொல்லணி அமைந்தவை 29, 30, 98 என்பன. **கட்டளைக்** கலித்துறை போல எழுத்தெண்ணிப் பாடப் பெறுவதாய்த், தொடக்கம் நேரசை எனின் அரை யடிக்கு 11 எழுத்தும், நிரையசை எனின் 12 எழுத்தும் பெற்றுவரும் **கட்டளைக்கலிப்பா** என்னும் ஒருவகைச் செய்யுளில் 9 பாடல்கள் இந்நூலில் உள. அவை 16, 17, 18, 24, 30, 36, 79, 85, 90 என்பன.

இந்நூலில் காசியைப் பற்றியனவாக உள்ள செய்தி கள் பல. காசித்தலத்தை அவிமுத்தம், ஆனந்தவனம் என்றும், விசுவநாதரை அகிலேசர், காசிநாதர் என்றும், விசாலாட்சியம்மையைப் பெருந்தடங்கணம்மை, ஆனந்த வல்லி என்றும் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் கூறியுள் ளார்கள். இத்தலத்தில் உயிர்கள் இறக்கும்போது விசுவ நாதர் எழுந்தருளி வந்து பிரணவோபதேசம் செய்வர் என்றும் அவ்வுயிர்கள் சாரூபம் பெறும் என்றும் சொல்லப் பெற்றுள்ளது (செ. 10, 12, 55, 94). காசித்தலத்தில் இயமபயமில்லை என்றும் பைரவக் கடவுளே தண்டிக்கும் அதிகாரி என்றும் (செ. 56-ல்) கூறப்பெற்றுள்ளது.

“முத்தலந்தலங்களுள் முத்தித்தலமாக” விளங்கு வனவற்றுள் காசிப்பதி யொன்ருகும். இத்தலச் சிறப்புக் களைக் கூறும் **காசிக்கலம்பகம்** என்னும் இந்நூல் இன்றியமையாத அரும்பதக் குறிப்புக்களுடன், திருப் பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** திரு வுளப்பாங்கின் வண்ணம், **ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அவர்களின்** 279-ஆம் ஆண்டு **மகேசுவர**

**பூசைத் திருநாள்** வெளியீடாகப் பிலவங்க ஆண்டு வைகாசித்திங்கள் 12-ஆம் நாள், (26-5-1967-ல்) வெளியிடப் பெறுகின்றது. சைவ நன் மக்களாவார் இந்நூலைப் பெற்றுக் கற்றுக் "கதிவேட்டடைபவர்க்கு நல் வாழ்வையே தரும் காசிப்பிரான்" திருவருள் பெறுவாராகுக.

இந்நூல் வெளியீட்டுப் பணியில் அடியேனை ஈடுபடுத்தியருளிய எங்கள் தலைவர், ஸ்ரீ காசிமடத்து அதிபர் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களின்** பொன்னார் திருவடிகளை மனமொழி மெய்களால் வந்தித்து வாழ்த்துகின்றேன்.

காசிக்கலம்பகம் என்னும் நூல் அச்சு ஆகுங்கால் பல பணிகளையும் செவ்வனே செய்து வந்தோர், மகாமகோபாத்தியாய Dr. உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் பெயரரும், ஸ்ரீ கலியாண சுந்தரையர் அவர்களின் குமாரரும் ஆன திரு. க. சுப்பிரமணிய ஐயர் B.A., அவர்களும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் 'கல்லூரி பிரின்ஸிபால் திரு. K. M. வேங்கடராமையா M.A., B.O.L. அவர்களும் ஆவர். அன்னோர்க்குச் செந்திலாண்டவன் திருவருள் மல்குக.

தேத்தமிழ் தெளிக்கும் செந்நாப் புலவீர்!

.................................

பாத்தொடுத் தடுத்த பரஞ்சுடரை
நாத்தழும் பிருக்க வேத்துமி னீரே—காசிக்கலம்பகம்

வித்துவான்

திருப்பனந்தாள் 26—5—1967 } **ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்**
இளவரசு, ஸ்ரீகாசி மடம்.

சிவ சிவ

செந்திலாண்டவன் துணை

# ஸ்ரீ ஆதி குமரகுருபரர் சுவாமிகள் வரலாறு

திமிரம தகற்றும் தெய்வக் கவிஞன்
குமர குருபரன் குரைகழல் வெல்க.—**தனிப்பாடல்**

தென்பாண்டி நாட்டில் தாமிரபரணி நதியின் வடகரையில் ஸ்ரீவைகுண்டம் என்று வழங்கும் திருப்பதி ஒன்றுண்டு. அதன் வட பகுதி ஸ்ரீ கைலாசபுரம் எனப் பெறும். அங்கே வழிவழித் தமிழ்ப்புலமையும் முருகப் பெருமானிடத்தில் பக்தியும் பொருந்திய சைவ வேளாளர் குடும்பத்தில் சண்முகசிகாமணிக் கவிராயர் என்ற ஒருவர் வாழ்ந்தார். அவரது வாழ்க்கைத் துணைவி சிவகாம சுந்தரி யம்மையார் எனப்பெற்றார். இவர்களுக்கு ஓர் ஆண் மகவு ஆனித் திங்கள் திருவாதிரை நன்னாளில் பிறந்தது. அக்குழந்தைக்குக் **குமரகுருபரன்** என்னும் பெயர் சூட்டினர்.

குமரகுருபரர் ஐந்தாண்டுகள் வரையில் பேசவில்லை. பெற்றோர்கள் வருந்தினர்; குமரகுருபாரரைத் திருச்செந்தூருக்கு அழைத்துச் சென்றனர்; ஸ்ரீ செந்திலாண்டவன் திருமுன் கிடத்தித் தாமும் வரம் கிடந்தனர். செந்திலம் பதிவாழ் கந்தனதருளால் குமரகுருபரர் பேசும் ஆற்றல் பெற்று 'ஓதாதுணர்ந்த போதனைக்' **கந்தர் கலிவெண்பா** என்ற பிரபந்தத்தைப் பாடியருளி

ணர். பின்னர்த் தம்மூருக்கு வந்து ஸ்ரீ கயிலாசநாதர் மீது **கைலைக் கலம்பகம்** என்ற பிரபந்தம் ஒன்றும் இயற்றினர்.

இறைவன் திருவருளால் எல்லாக் கலை ஞானங் களும் கைவரப்பெற்ற குமரகுருபரர் மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் வழிபடுவதற்கு விரும்பியவராய்ப் பல சிவத்தலங்களைத் தரிசித்துக்கொண்டே மதுரைக்குச் சென்றார்; அங்குத் தங்கியிருந்த காலத்தில் **ஸ்ரீ மீனாக்ஷி யம்மை பிள்ளைத் தமிழ்** என்ற பிரபந்தத்தைப் பாடி, மதுரையில் அந்நாளில் ஆண்டு வந்த திருமலை நாயக்கர் (கி. பி. 1623—1659) முன்னிலையில் அரங் கேற்றினர். அந்நூலை அரங்கேற்றுங்கால் ஸ்ரீ மீனாட்சி யம்மையே குழந்தை யுருவத்தில் எழுந்தருளிவந்து, '**தொடுக்குங் கடவுள்**' என்ற பாடலைக் கூறி விரிவுரை யாற்றும்பொழுது, தம் திருக்கழுத்திலிருந்த முத்து மாலையை எடுத்துக் குமரகுருபரருக்கு அணிவித்து மறைந்தருளினர். திருமலை நாயக்கரும் வியப்பும் மகிழ் வும் எய்திக் குமரகுருபரரைப் பல்லக்கிலேற்றி வழிபாடு செய்தார். குமரகுருபரர் மதுரையில் தங்கியிருந்த காலத்தில் **மதுரைக் கலம்பகம்** என்னும் நூலை இயற்றி ஞர்; பின்னர்த் திருமலை நாயக்கரது வேண்டுகோட் படி **நீதிநெறி விளக்கம்** என்னும் நீதி நூலையும் இயற்றினர்.

பிறகு குமரகுருபரர் சோழநாட்டுத் திருவாரூரை அடைந்தார்; அங்குத் தியாகேசரைத் தரிசித்துத் **திரு வாரூர் நான்மணி மாலை** என்னும் நூலைப் பாடினர்.

சிவஞானோபதேசம் பெறவேண்டும் என்ற அவா மிக்குடையவராகிய குமரகுருபரர் ஞானசிரியர் ஒருவரை நாடினர். அற்றைஞான்று திருக்கயிலாய பரம்பரைத்

தருமபுர ஆதீனத்தில் நான்காவது பட்டத்தில் எழுந் தருளி அருட்செங்கோல் ஓச்சியவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ **மாசிலா மணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** ஆவர். ஞானசிரியரை நாடிச்சென்ற குமர குருபரர் தருமபுரத்தை அடைந்தார்; ஸ்ரீ மாசிலாமணி தேசிகரைத் தரிசித்துத் தமது ஞானசிரியராகக்கொண்டு, தமக்குத் “துறவுநிலை யருளல்வேண்டும்” என்று வேண்டினர். ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிகரும், குமர குருபரரைக் ‘காசியாத்திரை செய்து வருக’ எனப் பணித்தார்கள். ‘காசிக்குச் சென்றுவர நெடுங்கால மாகுமே’ என்று குமரகுருபரர் கவன்றார். ஞானசிரி யரும், ‘சிதம்பரம் சென்று வருக’ என்று கட்டளை அருளினர்கள்.

சிதம்பரத்துக்குச் செல்லும் குமரகுருபரர் புள்ளி ருக்கு வேளூர் எனப்பெறும் வைத்தீசுவரன் கோயிலுக்குச் சென்றார்; அங்குத் திருக்கோயில் கொண்டிருக்கும் முத்துக்குமாரசுவாமி பேரில் **முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்** என்னும் பிரபந்தத்தைப் பாடினர்; பிறகு சிதம்பரம் சென்று நடராசப்பெருமானைத் தரி சித்து அங்குச் சின்னள் தங்கியிருந்தார். அந்நாளில் **சிதம்பர மும்மணிக் கோவை** என்ற பிரபந்தத்தைக் குமரகுருபரர் இயற்றினர். ‘யாப்பருங்கலக் காரிகையில் காணப்படும் உதாரணச் செய்யுட்கள் சைனச் சார்புடை யனவாயிருத்தலின் சைவசமயச் சார்புடைய செய்யுட் களைத் தருதல் வேண்டும்’ என்று சிவநேசச் செல்வர்கள் வேண்டிக்கொண்டதற்கேற்பச் **சிதம்பரச் செய்யுட் கோவை** என்ற பிரபந்தத்தையும் குமரகுருபரர் அருளிச் செய்தார். பின்னர்க் குமரகுருபரர் தருமபுரத்துக்கு வந்து ஞான தேசிகர்பால் காஷாயம் பெற்றார்; ஞான தேசிகர் பேரில் **பண்டார மும்மணிக்கோவை** என்ற பிரபந்தத்தையும் இயற்றினர்.

பிறகு, குமரகுருபர சுவாமிகள் ஞானசிரியரிடத்தில் விடைபெற்றுக் காசிக்குச் சென்றார்; தம்முடைய கல்வி யறிவினாலும், தவப்பண்பினாலும், டில்லி பாதுஷாவின் பெருமதிப்பைப் பெற்றார்; டில்லி பாதுஷாவோடு பேசு வதற்கு அந்நாட்டு மொழி அறியவேண்டும் ஆதலின், கலைமகளை வேண்டிச் சகலகலா வல்லி மாலை என்னும் பிரபந்தத்தை இயற்றி இந்துஸ்தானியைப் பேசும் ஆற் றல் பெற்றார். பாதுஷாவும் இவரது விருப்பத்திற் கிணங்கி, இவர் காசியில் இருப்பதற்குரிய மடம் அமைத் துக்கொள்ளக் கேதார கட்டத்தில் இடம் அளித்தார். குமரகுருபர சுவாமிகளும் காசியில் மடம் நிறுவினார். அஃது இற்றைநாளில் குமாரசாமி மடம் என்ற பெயரில் உள்ளது. அத் திருமடத்தில் தங்கி யிருந்தகாலத்தில் இவர் காசித்துண்டி விநாயகர் பதிகமும், காசிக் கலம்பகமும் இயற்றியருளினார்; தம் திருமடத்தில் புராணசாலை ஒன்று ஏற்படுத்திக்கொண்டு சிவபுராணப் பிரசங்கங்கள் செய்து வந்தார்; கேதார கட்டமும் அறச்சாலையும் ஏற்படுத்திச் சிவப்பணிகள் பல ஆற்றிப் பன்னெடு நாட்கள் அங்குத் தங்கியிருந்தருளினார்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஒரு வைகாசி மாசத்து கிருஷ்ணபக்ஷம் திருதியையில் சிவபெருமான் திருவடி நீழலை எய்தினார்.

உ

சிவ சிவ

# காசிக் கலம்பகம்

## காப்பு

1. (நேரிசைவெண்பா)

பாசத் தளையறுத்துப் பாவக் கடல்கலக்கி
நேசத் தளைப்பட்டு நிற்குமே - மாசற்ற
காரார் வரையீன்ற கன்னிப் பிடியளித்த
ஓரானை வந்தெ னுளத்து.

2. (மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா)

—தரவு—

(1) நீர்கொண்ட கடலாடை
நிலமகளுக் கணியான
கார்கொண்ட பொழிற்காசிக்
கடிநகரங் குளிர்தூங்க
இடமருங்கிற் சிறுமருங்குற்
பெருந்தடங்க ணின்னமிர்தும்
சடைமருங்கி னெடுந்திரைக்கைப்
பெண்ணமிர்துந் தலைசிறப்பக்
கண்கதுவு கடவுண்மணி
தெரிந்தமரர் கம்மியன்செய்

விண்கதுவு பொலங்குடுமி
விமானத்தின் மிசைப்பொலிந்தோய்.

(2) நிற்பனவுந் தவழ்வனவு
நடப்பனவுமாய்நிலத்துக்
கற்பமள விலகண்டு
முறுகளைகண் காணுமே
பழங்கணுறு முயிர்கடுயர்க்
கடனீத்துப் பரங்கருணை
வழங்குபர மானந்த
மாக்கடலிற் றிளைத்தாட
உரையாத, பழமறையின்
முதலெழுத்தி னெண்பொருளை
வரையாது கொடுத்திடுநின்
வள்ளன்மை வாழ்த்துதுமே.

—தாழிசை—

1. நீரெழுத்துக் கொத்தவுட
னீத்தார்க்கு நீநவில்வ
தோரெழுத்தே முழுதுமவ
ரெவ்வண்ண முணர்வதுவே.

2. என்பணிவ துடுப்பதுதோ
லெம்பிரான் றமர்களவர்
முன்பணியும் பேறுடையார்
திசைமுகனு முகுந்தனுமே.

3. செடிகொண்முடைப் புழுக்கூடே
சிற்றடியோ மிடுதிறைமற்
றடிகளடி யார்க்களிப்ப
தானந்தப் பெருவாழ்வே.

4. பற்பகனேற் றருந்தவரும்
பெறற்கரிய பரந்தாமம்
எற்புடல்விற் றளியேமுங்
கொளப்பெறுவ திறும்பூதே.

5. நிணம்புணர்வெண் டலைக்கலன்கொ
ணேரிழைமுத் தித்திருவை
மணம்புணர்வார்க் கையனருண்
மணவாளக் கோலமே.

6. முடைத்தலையிற் பலிகொள்வான்
மூவுலகு மவரவர்தங்
கடைத்தலையிற் றிரிவதுகொல்
யாம்பெறுநின் காணியே.

—அராகம்—

1. உளதென விலதென வொருவரொ ரளவையின்
அளவினி லளவிட லரியதொ ருருவினை.
2. இதுவென லருமையி னெழுதரு மொழிகளும்
அதுவல வெனுமெனி னெவருனை யறிபவர்.
3. அவனவ ளதுவெனு மவைகளி னுளனலன்
எவனவ னிவனென வெதிர்தரு தகைமையை.

4. அறிபவ ரறிவினு ளறிவுகொ டறிவுறு
நெறியல தொருவரு மறிவரு நிலைமையை.

—நாற்சீரோரடி அம்போதரங்கம்—

ஆணொடு பெண்ணுரு வமைந்து நின்றனை.
பூண்முலை கலந்துமைம் புலனும் வென்றனை.
எண்வகை யுறுப்பினோ ருருவெ டுத்தனை.
தொன்மறைப் பனுவலின் றொடைதொ டுத்தனை.

—முச்சீரோரடி அம்போதரங்கம்—

வடவரை குழைய வளைத்தனை.
மலைமகண் முலைக டிளைத்தனை.
விடமமிர் தமர விளைத்தனை.
விசயனொ டமர்செய் திளைத்தனை.
வரிசிலை மதனை யெரித்தனை.
மதகரி யுரிவை தரித்தனை.
அருமறை தெரிய விரித்தனை.
அலகில்பல் கலைக டெரித்தனை.

—இருசீரோரடி அம்போதரங்கம்—

அழல்வி ழித்தனை. பவமொ ழித்தனை.
ஆற ணிந்தனை. மாற ணிந்தனை.
மழுவ லத்தினை. முழுந லத்தினை.
மாந டத்தினை. மானி டத்தினை.
அலகி றந்தனை. தலைசி றந்தனை.
அருள்சு ரந்தனை. இருடு ரந்தனை.
உலக ளித்தனை. தமிழ்தெ ளித்தனை.
ஒன்று மாயினை. பலவு மாயினை.

—தாழிசை—

1. அலகில்பல புவனங்க
ளடங்கலுமுண் டொழிப்பாய்க்குக்
கொலைவிடமுண் டனையென்று
கூறுவதோர் வீறுமே.

2. பயின்மூன்று புவனமுங்கட்
பொறிக்கிரையாப் பாலிப்பாய்க்
கெயின்மூன்று மெரிமடுத்தா
யென்பதுமோ ரிசையாமே.

3. அடியவரே முக்குறும்பு
மறவெறிந்தா ரெனினடிகள்
விடுகணைவிற் காமனை நீ
வென்றதுமோர் வியப்பாமே.

4. இக்கூற்றின் றிருநாமத்
தொருகூற்றுக் கிலக்கென்றால்
அக்கூற்றங் குமைத்தனையென்
றிசைப்பதுமோ ரற்புதமே.

எனவாங்கு

—சுரிதகம்—

உலகுசூற் கொண்ட தலைவியு நீயும்
மலைபக வெறிந்த மழவிளங் குழவியை
அமுதமூற் றிருக்குங் குமுதவாய்த் தேறல்
வண்டுகி னனைப்ப மடித்தலத் திருத்திக்
கண்களிற் பருகியக் காமரு குழவி

எழுதாக் கிளவி யின்சுவை பழுத்த
மழலைநா றமிர்தம் வாய்மடுத் துண்ணச்
செஞ்செவி நிறைத்தநும் மஞ்செவிக் கடிகளென்
புன்மொழிக் கடுக்செ(ர)ளப் புகட்டினன்
இன்னருள் விழைகுவா யிறும்பூ துடைத்தே.

3. (நேரிசை வெண்பா)

உடையா ளகிலேசர்க் கோங்குமுலைக் கோட்டின்
அடையாள மிட்டுவையா ளானுற் - கடையிலவர்
செவ்வண்ணம் பெற்றுர் திரளொடுநிற் கின்றுரை
எவ்வண்ணங் கண்டிறைஞ்சு வேம்.

## தூது

4. (கட்டளைக் கலித்துறை)

இறைவளைக் காகம் பகுந்தளித் தாரகி லேசர்கொன்றை
நறைவளைக் கும்முடி யாரடிக் கேகங்கை நன்னதியின்
துறைவளைக் குங்குரு கீருரு கீரென்று தூமொழிகைக்
குறைவளைக் கும்முங்கள் பேரிட்ட தாற்சென்று கூறிடுமே.

## புயவகுப்பு

5. (சந்த விருத்தம்)

இடமற மிடைதரு கடவுளர் மடவியர்
எறிதரு கவரிநி ழற்கட் டுயின்றன
இனவளை கொடுமத னிடுசய விருதென
இறையவ ளெழுதுசு வட்டுக் கிசைந்தன

இருவரு நிகரென வரிசிலை விசயனொ
டெதிர்பொரு சமரிலி ளைப்புற் றிருந்தன
இணையடி பரவிய மலடிமு னுதவிய
இடியலி னுணவொரு கொட்டைப் பரிந்தன
படவர வுமிழ்தரு மணிவெயில் விடவளர்
பருதியொ டெழுமுத யத்திற் பொலிந்தன
பருகுமி னமிர்தென வுருகிரு கவிஞர்கள்
பனுவலின் மதுரவி சைக்குக் குழைந்தன
படரொளி விடுசுடர் வலயம தெனவொரு
பருவரை நெடுவிலெ டுத்துச் சுமந்தன
பரர்புர மெரியொடு புகையெழ மலர்மகள்
பணைமுலை தழுவுச ரத்தைத் துரந்தன
மடலவிழ் தடமல ரிதழியி னிழிதரு
மதுமழை யருவிகு ளித்துக் கிளர்ந்தன
வழிதர வுதிரமு நிணமொடு குடர்களும்
வருநர கரியின்ம தத்தைத் தடிந்தன
மதகரி யுரியதள் குலகிரி முதுகினின்
மழைமுகி றவழ்வதெ னப்பொற் பமைந்தன
மலிபுகழ் நிலவொடு மடுதிறல் வெயிலெழ
மதிகதிர் வலம்வரு வெற்பொத் துநின்றன
குடவளை துறைதொறு முடுநிரை யெனவிரி
குளிர்நில வெழவுமிழ் முத்தைத் தடங்கரை
குலவிய படர்சிறை மடவன மொடுசில
குருகுகள் சினையொட ணைத்துத் துயின்றிடு
குரைபுனல் வரநதி சுரர்தரு முருகவிழ்
கொழுமலர் சிதறவி முத்தத் துவிண்டொடு

குலகிரி யுதவிய வளரிள வனமுலை
　　கொழுநர்த மழகிய கொற்றப் புயங்களே.

6. (நேரிசை வெண்பா)

புயலார் பொழிற்காசிப் பூங்கோயின் மேய
கயலார் தடங்கணாள் காந்தன்—செயலாவி
உய்யத் துதியா ருதிப்பார் துதிப்பாரேல்
வையத் துதியார் மறுத்து.

7. (கட்டளைக் கலித்துறை)

மறைக்கோலங் கொண்ட வகிலேச
　　ரேயின்று மாதர்முன்னே
பிறைக்கோலங் கொண்டு புறப்பட்ட
　　வாமுன் பிறைமுடித்த
இறைக்கோல மோல மெனத்தேவ
　　ரோல மிடவிருண்ட
கறைக்கோலங் கொண்டுநுங் கண்டத்
　　தொளித்த கனல்விடமே.

8. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

விடுத்த வாளிக்கும் விரகிலாக்
　　கருப்புவில் வீணன்மீ ளவும்வாளாத்
தொடுத்த வாளிக்கு மேபகை
　　மூண்டதித் தூயநன் மொழிக்கென்னும்
அடுத்த நான்மறை முனிவரர்
　　நால்வர்க்கு மம்மறைப் பொருள்கூற

எடுத்த கோலமா யானந்த
வனத்துமெம் மிதயத்து மிருந்தோனே.

9. (கட்டளைக் கலித்துறை)

இருப்பா ரவிமுத்தத் தெங்கேகண்
மூடுவ ரென்றும்வெள்ளிப்
பொருப்பாள ரோடித் திரிவதெல்
லாமிப் புவனங்களை
உருப்பாதி யிற்படைத் தோர்பாதி
யிற்றுடைத் தூழிதொறும்
விருப்பா ருயிர்களின் மேல்வைத்துத்
தாஞ்செயும் வேலைகண்டே.

10. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

கண்ணொன்று திருநுதலிற் கனலுருவ
மாப்படைத்த காசி நாதா
தண்ணொன்று நறையிதழித் தாரென்று
ணெட்டுயிர்த்தா டரைமேல் வீழ்ந்தாள்
எண்ணொன்று முணராமே கிடக்கின்று
ளிதுகண்டா லெழுதீதொன் றேதத்
துண்ணென்று வருவரெனத் துணிந்தனளோ
வறியேனித் தோகை தானே.

11. (நேரிசை வெண்பா)

தோகை யுயிர்முடிப்பான் றும்பைமுடித் தான்மதவேள்
வாகை முடித்திடவும் வல்லனே—ஆகெடுவீர்

காமாந் தகர்காசிக் கண்ணுதலார்க் கோதீர்மற்
றேமாந் திராம.லெடுத்து.

12. (கட்டளைக்கலித்துறை)

எடுக்கச் சிவந்த சிலம்படி யாரகி லேசர்நறைக்
கடுக்கைச் சடைமுடி யாரடி யார்க்குக் கலைகள் கொய்து
கொடுக்கக் கொடுக்க வளர்கின்ற வாவெறுங் கூட்டிலெரி
மடுக்கக் குறையுயிர் மாதரைத் தேடு மதிக்கொழுந்தே.

13. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

கொழுதி வரிவண் டுழுதுழக்குங்
குழலீர் நறுங்கட்.கோதையிவள்
அழுத விழிநீர் முந்நீரை
யுவர்நீ ராக்கு மதுகூறீர்
எழுத வரிய திருமார்பி
லிளஞ்சேய் சிறுசே வடிச்சுவடும்
முழுது முடையாண் முலைச்சுவடு
முடையார் காசி முதல்வர்க்கே.

14. (நேரிசை வெண்பா)

வரைவளைக்கும் பொற்றடந்தோண் மைந்தர்க் கிவரார்
நிரைவளைக்கை யார்நகைக்கு நேராக்—கரையிற்
குவிமுத்தம் வெண்ணிலவு கொப்புளிக்குங் கங்கை
அவிமுத்தஞ் சென்றிறைஞ்சா தார்.

15. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

ஆர்க்கும் படைவே ளரசிருப்பென்
றஞ்சா தடிக ளருட்காசி
ஊர்க்கும் புதுத்தோ ரணம்வைத்தா
லுமக்கிங் கிவள்பேச் சுரைப்பாரார்
வார்க்குங் குமப்பூண் முலைச்சுவட்டை
வளையென் றேடி வளைந்துசுற்றிப்
பார்க்குந் துளைமுள் ளெயிற்றுரகப்
பணியீர் மோகந் தணியீரே.

## பிச்சியார்

16. (கட்டளைக் கலிப்பா)

தண்ணு லாம்பொழிற் காசித் தெருவினீர்
தரித்தி டுந்தவக் கோலமுஞ் சூலமும்
பெண்ணொ டாடுமப் பிச்சனுக் கொத்தலாற்
பிச்சி யாரெனும் பேர்தரித் தாடுவீர்
வெண்ணி லாமுகிழ்க் குங்குறு மூரலால்
வீணி லேயெம் புரத்தெரி யிட்டநீர்
கண்ணி னாலுமிக் காமனைக் காய்ந்திடிற்
கடவு ணீரென் றிறைஞ்சுதுங் காணுமே.

17. காணுங் காணு நதிகளெல் லாம்புனற்
கங்கை யேயங் குளதெய்வம் யாவையும்
தாணு வெங்க ளகிலேச ரேமற்றைத்
தலங்கள் யாவுந் தடமதிற் காசியே

பூணு மாசைமற் ரென்றே யுடல்விடும்
போது நன்மணி கர்ணிகைப் பூந்துறை
பேணு மாறு பெறவேண்டு மப்புறம்
பேயொ டாடினு மாடப் பெறுதுமே.

18. பெற்ற மூர்வதும் வெண்டலை யோட்டினிற்
பிச்சை யேற்றுத் திரிவதும் பேய்களே
சுற்ற மாகச் சுடலையில் வாழ்வதும்
தோலு டுப்பதுந் தொண்டர்க் கரிதன்றுற்
கற்றை வார்சடைக் காசிப் பதியுளீர்
கற்பந் தோறுங் கடைநா ளுலகெலாம்
செற்று மீளப் படைக்கவும் வேண்டுமே
தேவ ரீர்பதஞ் சிந்திப்ப தில்லையே.

19. (நேரிசை வெண்பா)

இல்லாளே முப்பத் திரண்டறமுஞ் செய்திருப்பச்
செல்லார் பொழிற்காசிச் செல்வனார்—மெல்லப்
பரக்கின்ற புண்ணீர்ப் படுதலைகொண் டையம்
இரக்கின்ற வாறென்சொல் கேன்.

20. (கொச்சகக் கலிப்பா)

சொல்லா வதுமறையே சொல்லுவது நல்லறமே
இல்லா வதுமுத்திக் கேதுவா மித்தலமே
அல்லார் குழலளவு மாகொன் மனம்வயிரக்
கல்லா விருந்தவா காசிப் பிரானார்க்கே.

21. (கட்டளைக் கலித்துறை)

பிரானென் றவர்க்கொரு பெண்ணோடு மோடிப் பெருங்கருணை
தரா நின்ற காசித் தடம்பதி யார்வந்தென் றன்னகத்தே
இரா நின் றனரைம் புலக்கள்வர் கொள்ளையிட் டேகுதற்கே
வரா நின்ற போதுள்ள மாதனங் காத்து வழங்குதற்கே.

## கொற்றியார்

22. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

வழுத்துமவர்க் கானந்த வாழ்வையருள் வார்காசி
வளமை யெல்லாம்
கொழுத்ததமி ழாற்பாடித் துளசிமணி தரித்தாடுங்
கொற்றி யாரே
பழுத்ததவக் கோலமுங்கைச் சங்கமுமா ழியுங்கண்டு
பணிந்தே மாகின்
முழுத்ததவத் தால்யாமு மாலாயி னேங்கூடி
முயங்கு வீரே.

23. (கட்டளைக் கலித்துறை)

முயலாம லேதவ முத்தித் திருவை முயங்கநல்கும்
கயலார் பெருந்தடங் கண்ணிபங் காரருட் காசியிலே
செயலாவ தொன்றிலை வாளா நெடுந்துயில் செய்யுமுங்கள்
பயலாக வேபணி செய்வார் புவனம் படைப்பவரே.

24. (கட்டளைக் கலிப்பா)

படுத்த பாயுட னேபிணி மூழ்கினும்
பல்வி ழுந்து நரைத்தற மூப்பினும்

அடுத்த திங்கிவர்க் கேபெரு வாழ்வெனும்
அப்பெ ரும்பதி யெப்பதி யென்பிரேல்
விடுத்து விட்டிந் திர திரு வும்புவி
வெண்கு டைக்கு ளிடுமர சாட்சியும்
கடுத்த தும்பு களத்தரைத் தேடுவார்
காத லித்து வருந்திருக் காசியே.

25. (கட்டளைக் கலித்துறை)

திருக்கோலங் கொண்டநற் றேன்மொழி
யாளெண் டிசையினுநின்
உருக்கோல மேகண்டுங் கண்டிலள்
போலு மொழுகுநறை
மருக்கோல நீலக் குழல்சே
ரவிமுத்த வாணதொல்லை
இருக்கோல மிட்டுண ராயெங்கு
மாகி யிருப்பதுவே.

26. இருகுங் குமக்குன்றும் பீர்பூப்பக்
காம வெரியினினின்
றுருகும் பசும்பொன் னுக் கோர்மாற் றுண்
டேலுரை யாய்தொடுத்துச்
செருகு நறுங்கொன்றை தேன்பிழிந்
தூற்றச் சிறைச்சுரும்பர்
பருகும் பொலஞ்சடை யாய்காசி
வாழ்முக்கட் பண்ணவனே.

27. (கலிநிலைத்துறை)

பண்ணேர் வேதம் பாடிய காசிப் பதியாயிப்
பெண்ணே ரொருவ னெய்கணை யைந்தும் பெய்தானல்
உண்ணேர் நின்று யின்னரு ளாலென் னுயிரன்னுள்
கண்ணேர் நிற்றற் கொல்கி யொழிந்த கழுநீரே.

28. (கட்டளைக் கலித்துறை)

கழியுந் தலைக்கலன் பூண்டாடுங்
 காசிக் கடவுணுதல்
விழியு மிடக்கண்ணும் வெண்ணெருப்
 பேயவ் விழியிரண்டிற்
பொழியுங் கனல்விழி காமனைக்
 காய்ந்ததப் போரிலுடைந்
தொழியும் படைகளென் ,றேவெமைக்
 காயுமற் றேர்விழியே.

## மடக்கு

29. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

விழைகுவ தன்பர கஞ்சுகமே
 வெங்கரி யின்னுரி கஞ்சுகமே
தொழிலடி கட்குள மாலயமே
 தூமுனி வோருள மாலயமே
அழகம ரும்பணி யென்பணியே
 யாட்கொள மேற்கொள்வ தென்பணியே
மழகளி றீன்ற வளம்பதியே
 வாழ்வது காசி வளம்பதியே.

## மடக்கு

30. (கட்டளைக் கலிப்பா)

வண்ண மேனி யரும்பு வனங்களே
வாசம் வாச மரும்பு வனங்களே
நண்ணு மாலய மாதவ ரங்கமே
ஞால மேழ்தரு மாதவ ரங்கமே
தண்ணென் மாலை தருமருக் கொன்றையே
தருவ தையர் தருமருக் கொன்றையே
கண்ணி னிற்பர் மனத்திருக் கோயிலே
காசி யேயவர்க் கோர்திருக் கோயிலே.

31. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

திருகுசினக் கூற்றினெயிற் றிடைக்கிடந்துங்
கடைநாளிற் றிரையே ழொன்றாய்ப்
பெருகுமுழு நீத்தத்திற் றிளைத்தாடப்
புணைதேடும் பேதை நெஞ்சே
உருகிலைநெக் குடைந்திலைமொண் டானந்த
வனத்தேனை யோடி யோடிப்
பருகிலைகண் ணரும்பிலைமெய் பொடித்திலைமற்
றுனக்கென்ன பாவந் தானே.

## ஊர்

32. (நேரிசை வெண்பா)

பாவலரு நாவலரும் பண்மலரக் கண்மலரும்
காவலரு மேடவிழ்க்குங் காசியே—தீவளரும்

கஞ்சக் கரத்தான் கலைமறைக்கு நாயகமாம்
அஞ்சக் கரத்தா னகம்.

33. அகமே யவிமுத்த மையரிவர்க் காகம்
சகமேழு மீன்றெடுத்த தாயே—மிகமேவும்
எண்ணம் பரமே யெமக்களித்தன் முச்சுடரும்
கண்ணம் பரமே கலை.

## அம்மானை

34. (தாழிசை)

கலைமதியின் கீற்றணிந்த காசியகி லேசர்
சிலைமதனைக் கண்ணழலாற் செற்றனர்கா ணம்மானை
சிலைமதனைக் கண்ணழலாற் செற்றனரே யாமாகின்
மலைமகட்குப் பாகம் வழங்குவதே னம்மானை
வழங்காரோ வப்பாலு மாலான லம்மானை.

35. (கட்டளைக் கலித்துறை)

அம்மனை தம்மனை யாத்திருக் கோயி லவிமுத்தமா
எம்மனை யாய்த்தந்தை யாயிருந் தாரடிக் கீழிறைஞ்சீர்
நம்மனை மக்களென் றேக்கறுப் பீருங்க ளுளலந்தாற்
சொம்மனை வைத்தெப் படிநடப் பீர்யமன் றூதரொடே.

36. (கட்டளைக் கலிப்பா)

தூது கொண்டுந் தமைத்தோ ழமைகொண்ட
தொண்டர் தண்டமிழ்ச் சொற்கொண்ட குண்டலக்

காது கொண்டெங் கவிதைகொண் டாட்கொண்ட
காசி நாதர் கருத்தே தறிகிலேம்
போது கொண்டொரு பச்சிலை கொண்டுதாம்
பூசை செய்திலர் புண்டரி கப்பதம்
ஏது கொண்டு கொடுப்பர் கொடுப்பரே
லிருவ ருக்குமற் றென்படு நெஞ்சமே.

## சித்து

37. (நேரிசை வெண்பா)

ஏடவிழ்பொற் கொன்றையகி லேசரன்பர்க் கேயிரும்பை
ஆடகமாக் கிக்கொடுத்தோ மவ்வளவோ—நீடுதிறல்
காட்டுமிமை யோர்க்கிருப்புக் கற்கனக மாக்கியண்ட
ஓட்டினையும் பொன்னாக்கி னோம்.

38. (நேரிசை யாசிரியப்பா)

பொன்னுருக் கன்ன பூந்துணர்க் கொன்றையும்
வெள்ளிமுளை யன்ன விரிநிலாக் கொழுந்தும்
காந்தண் மலர்ந்தன்ன பாந்தளி னிரையும்
திரைசுழித் தெறியும் பொருபுனற் கங்கையில்
வெள்ளிதழ்க் கமலம் வள்ளவாய் விரித்தென
முழுநகை முகிழ்க்குங் கழிமுடை வெண்டலை
தோலடிச் செங்காற் பால்புரை வரிச்சிறைக்
கிஞ்சுக மலர்ந்த செஞ்சூட் டெகினத்
துருவெடுத் தகல்வான் றுருவியுங் காணாத்
தொன்மறைக் கிழவநின் சென்னிமற் றியானே

கண்டுகொண் டனனிக் கடவுண்மா முடியெனப்
பெருமகிழ் சிறப்பக் குரவையிட் டார்த்து
வெள்ளெயி றிலங்க விரைவிற் சிரித்தெனப்
பெருவியப் பிழைக்கு மெரிபுரை சடையோய்
ஆள்வழக் கறுக்கும் வாளமர்த் தடங்கண்
மின்னுழை மருங்குற் சின்மொழி மகளிர்
ஒழுகொளி மிடற்றி னழகுகவர்ந் துண்டெனக்
கயிறுகொண் டார்க்குங் காட்சித் தென்ன
மரகதங் காய்த்துப் பவளம் பழுக்கும்
கமஞ்சூற் கமுகின் கழுத்திற யாத்து
வீசொளிப் பசும்பொ னூசலாட் டயர்தரப்
பருமணிக் கமுகின் பசுங்கழுத் துடைந்து
திரைபடு குருதித் திரடெறித் தென்ன
முழுக்குலை முரிந்து பழுக்காய் சிதறும்
மங்குல்கண் படுக்கு மதுமலர்ப் பொதும்பர்
கங்கைசூழ் கிடந்த காசி வாண
ஐவளி பித்தெனு மவைதலை யெடுப்ப
மெய்விட் டைவருங் கைவிடு மேல்வையில்
மாமுத றடிந்த காமரு குழவியும்
பொழிமதங் கரையு மழவிளங் களிறும்
மூண்டெழு மானம் பூண்டழுக் கறுப்ப
இடக்கையி னணைத்துநின் மடித்தலத் திருத்தி
உலகமோ ரேழும் பலமுறை பயந்தும்
முதிரா விளமுலை முற்றிழை மடந்தை
ஒண்டொடித் தடக்கையின் வீசு நுண்டுகிற்
றேகையிற் பிறந்த நாகிளந் தென்றல்

மோகமுந் தளர்ச்சியுந் தாகமுந் தணிப்ப
மறைமுதற் பொருளி னிறைசுவை யமுதினை
அஞ்செவி மடுத்துண வூட்டிநின்
குஞ்சித வடிக்கீழ்க் குடியிருத் துகவே.

39. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

குடியிருக்கும் புன்குரம்பை குலைந்திடுநாட்
கொலைக்கூற்றங் குமைத்த செம்பொன்
அடியிருக்கும் பரந்தாமப் புக்கில்புகுந்
தானந்த வமுத மாந்திக்
கடியிருக்கு நறைக்குழன்முத் தித்திருவை
முயங்கிடவுங் கடவேன் கொல்லோ
துடியிருக்கு மிடையவளோ டவிமுத்தத்
திருந்தபரஞ் சோதி யானே.

## களி

40. (பதினான்குசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

சோதி யொன்றிலொரு பாதி சத்தியொரு
பாதி யும்பரம சிவமெனத்
தொகுத்து வைத்தவவி முத்த நாயகர்
துணைப்ப தம்பரவு களியரேம்
ஓதி யோதியி ளைப்பர் வேத
முணர்த்து தத்துவ முணர்கிலார்
உணரும் வண்ணமனு பவத்தில் வந்திடுமொ
ருண்மை வாசக முணர்த்துகேம்

ஏதி னுலற மனைத்தி னும்பசு
விணைப்ப டுத்தனல் வளர்த்திடும்
யாக மேயதிக மென்ப தன்பர்த
மிறைச்சி மிச்சிலதி லிச்சையார்
ஆதி யாரறிவ ரதுகி டக்கமது
வருந்தி லப்பொழுதி லேபெறற்
கரிய தோர்பரம சுகம்வி ளைந்திடுவ
ததும றுத்தவிர வில்லையே.

41. (கட்டளைக் கலித்துறை)

இல்வாழ்வை விட்டுக் கதிவேட்
டடைபவர்க் கேழைபங்கன்
நல்வாழ்வை யேதருங் காசிப்
பிரானறும் பூங்கடுக்கை
வல்வார் முலைக்கொம்ப ஞய்தந்தை
தாண்மழு வாலெறிந்து
கொல்வா ரொருவருக் கல்லா
தெவர்க்குங் கொளற்கரிதே.

42. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

கொள்ளையிடச் சிலர்க்குமுத்திச் சரக்கறையைத்
திறந்துகொடுத் தனந்த கோடிப்
பிள்ளைகள்பெற் றுடையபெரு மனைக்கிழத்திக்
கேகுடும்பம் பேணு கென்று
உள்ளபடி யிருநாழி கொடுத்ததிலெண்
ணுன்கறமு மோம்பு கென்றுர்

அள்ளல்வள வயற்காசி யாண்டகையார்
பெருந்தகைமை யழகி தாமே.

## குறம்

43. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

அழகு துயில்குங் குமக்கொங்கை
யணங்கே யெங்க ளருட்காசிக்
குழகர் மகற்கு மகட்கொடுத்த
குடியிற் பிறந்த குறமகள்யான்
ஒழுகு தொடிக்கைக் குறியுமுகக்
குறியுந் தருமொள் வளைக்குறியும்
புழுகு முழுகு முலைக்குறியு
முடையா ரவர்பொற் புயந்தானே.

44. (கட்டளைக்கலித்துறை)

புயல்வண்ணக் கண்ணற் கொளித்தவக்
கள்வன் புணர்ப்பையெண்ணுள்
கயல்வண்ணக் கண்ணிதன் கண்ணினுட்
புக்கது கண்டிருந்தும்
செயல்வண்ணங் கண்டிலள் வாளாப்
புறத்தெங்குந் தேடுகின்றுள்
வயல்வண்ணப் பண்ணை யவிழுத்தத்
தானை மனத்துள்வைத்தே.

## மறம்

45. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

வையமுழு தொருங்கீன்ற விடப்பாக
ரானந்த வனத்தில் வாழும்
வெய்யதறு கண்மறவர் குலக்கொடியை
வேட்டரசன் விடுத்த தூதா
கையிலவன் றிருமுகமோ காட்டிருகண்
டொட்டுமுட்டைக் கதையிற் ருக்கிச்
செய்யகொடி றுடைத்தகல்வாய் கிழித்தரிவோ
நாசியொடு செவியுந் தானே.

46. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

தாக்கு படைவேள் கணைமழைக்குத்
தரியா திருகண் மழையருவி
தேக்கு மிவட்கா னந்தவனத்
திருந்தா ருள்ளந் திருந்தார்கொல்
காக்க வரிய விளவாடைக்
காற்றுக் குடைந்து கரந்துவச்சை
மாக்க ளெனவே முடவலவன்
வளைவா யடைக்கு மழைநாளே.

47. (கட்டளைக் கலித்துறை)

மழைவளைக் கும்பொழிற் காசிப்
பிரான்வெற்பில் வண்டறைபூந்
தழைவளைக் கைக்கொடுத் தேன்கண்ணி
லொற்றித் தளரிடைதன்

இழைவளைக் குங்கொங்கை யூடணைத்
தாளித் தழையினுள்ளே
கழைவளைக் குஞ்சிலை வேளனை
யாயிதைக் கண்டுகொள்ளே.

உ

48. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

கண்ணிருக்குந் திருநுதலுங் கனலிருக்குந்
திருக்கரமுங் கலந்தோர் பேதைப்
பெண்ணிருக்கு மிடப்பாலும் பிறையிருக்கு
மவுலியுமாய்ப் பிரிக்க லாகா
எண்ணிருக்குங் கணத்தொடுமா னந்தவனத்
திருப்பாரை யெங்கே காண்பார்
பண்ணிருக்கு மறைகளுமெண் கண்ணனுங்கண்
ணனுமமரர் பலருந் தானே.

49. (கட்டளைக் கலித்துறை)

பல்லாண்டு தம்மைப் படைத்தவத்
தேவரைப் பார்த்துப்பைம்பொன்
வில்லாண்ட தோள்கொட்டி யெந்தையர்
கோல விடம்பழுத்த
அல்லாண்ட கண்டத்தெம் மாதிப்
பிரானவி முத்தத்திலே
சில்லாண் டிருந்து சிவமாய்ச்
செலுஞ்சிறு செந்துக்களே.

50. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

செந்தே னொழுகும் பொழிற்காசி
சிறுநுண் ணுசுப்பிற் பெருந்தடங்கட்
பைந்தே னொழுகு மிடப்பாகர்
படைவீ டென்ப துணர்ராய்கொல்
வந்தேன் வளைந்தா யெமைப்பாவி
மதனு வினையே விளைந்தபோர்
உய்ந்தே குவதிங் கரிதனற்க
ணுடையார் மழுவாட் படையாரே.

0-17MICU,1C
A16

## மதங்கியார்

51. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

படலைநறுங் கடுக்கைமுடிப் பரஞ்சுடரா
ரிசைபாடிப் பசுந்தேன் பில்கி
மடலவிழ்பூம் பொழிற்காசி மணிமறுகில்
விளையாடு மதங்கி யாரே
உடலுமெமக் குயிருமொன்றே யோடரிக்கண்
வாளிரண்டு மொழிய வென்னே
தொடலைவளைத் தடக்கையின்வா ளிரண்டெடுத்து
வீசிடநீர் தொடங்கு மாறே.

181836

## ஊசல்

52. (கலித்தாழிசை)

தொடங்காமே பணிமலருந் தூவாமே நல்கும்
கடங்கால் களிற்றுரியார் காசிவளம் பாடி

விடங்கான் றகன்றுகுழை மேற்போய்க் குடங்கைக்
கடங்காத வுண்கணீ ராடுகபொன் னூசல்
அம்பொன்மலர்க் கொம்பன்னீ ராடுகபொன் னூசல்.

53. (நேரிசை வெண்பா)

பொன்னந்தா தென்னமலர்ப் பூந்துறையிற் புண்டரிகத்
தன்னந்தா தாடு மவிமுத்தர்—இன்னமிர்தா
முன்னங் கடுக்கை முகந்துண்டார் நல்காரே
இன்னங் கடுக்கை யிவட்கு.

54. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

குன்றிரண்டு சுமந்தொசியுங் கொடியன்னீ
ரவிமுத்தங் குடிகொண் டாகம்
ஒன்றிரண்டு வடிவானார் திரள்புயத்து
மார்பகத்து முமிழ்தேன் பில்கி
மின்றிரண்ட தெனப்புரளும் பொலங்கடுக்கைத்
தாமத்தின் விரைத்தா தாடிப்
பொன்றிரண்ட தெனவிருக்கும் பொறிவண்டு
செய்தவமென் புகலு வீரே.

55. (கொச்சகக் கலிப்பா)

புகுமே மதிக்கொழுந்தும் புன்மாலைப் போதும்
நகுமே கிளையு நகைத்தா னமக்கென்னே
உகுமே யுயிர்காசி யுத்தமரைக் காணத்
தகுமேயப் போதிதழித் தாரும் பெறலாமே.

56. ஆமோ வவிமுத்தத் தையரே பெண்பழிவீண்
போமோ வயிரவர்தஞ் சாதனமும் பொய்யாமோ
தேமோது கொன்றைச் செழுந்தாம நல்காநீர்
தாமோ தருவீ ருமதுபரந் தாமமே.

57. (கலிநிலைத்துறை)

பரந்தா மத்தைப் பல்லுயிர் கட்கும் பாலிப்பார்
வரந்தா மத்தைப் பின்றரு வதைமுன் வழங்காரேற்
புரந்தா மத்தைப் பொருதரு காசிப் புரமானுர்க்
கிரந்தா மத்தை யெனப்புக லீரேந் திழையீரே.

## பாணாற்றுப்படை

58. (நேரிசை யாசிரியப்பா)

இழுமென் மழலை யின்னமு துறைப்பப்
பிழிதே னொழுக்கி னொழுகுமின் னரம்பின்
வள்ளுகிர் வடிம்பின் வரன்முறை வருடித்
தெள்விளி யெடுக்குஞ் சீறியாழ்ப் பாண
வாழிய கேண்மதி மாற்றமொன் றியானும்
ஏழிசைப் பாணன்மற் றிறைமக னலனே
பலவுடன் பழிச்சுவ தொழிகமற் றம்ம
சிலபகல் யானுநின் னிலைமைய னாகி
நலம்பா டறியா விலம்பா டலைப்ப
நீர்வாய்ச் சிதலையு நூல்வாய்ச் சிலம்பியும்
சிலவிட மேய்ந்த சிறுபுன் குரம்பையில்
மசகமு முலங்கும் வாய்ப்படைக் குடவனும்
பசையில் யாக்கைத் தசைகறித் துண்ண

அரும்பசிக் குணங்கியும் பெரும்பிணிக் குடைந்தும்
சாம்பல்கண் டறியா தாம்பி பூத்த
எலிதுயி லடுப்பிற் றலை மடுத் தொதுங்கிச்
சிறுசிரு ரலறப் பெருமனைக் கிழத்தி
குடங்கையிற் ருங்கிய கொடிற்றினள் குடங்கைக்
கடங்கா வுண்க ணுறலைத் தொழுக
அழுகுரற் செவிசுட விழுமநோய் மிக்குக்
களைகண் காணு தலமரு மேல்வையிற்
கடவு ணல்லூழ் பிடர்பிடித் துந்தக்
குரைபுனற் கங்கைக் கரைவழிச் சென்ருங்குத்
தேம்பழுத் தழிந்த பூம்பொழிற் படப்பையிற்
கடவுட் கற்பகக் கொடிபடர்ந் தேறி
வான்றெடு கமுகின் மடற்றலை விரிந்து
நான்றன திசைதொறு நறுநிழற் கதலித்
தேங்கனி பழுத்த பூங்குலை வளைப்ப
அம்மலர்க் கொடியிற் செம்முக மந்தி
முடவுப் பலவின் முட்புறக் கனியைப்
புன்றலைச் சுமந்து சென்றிடுங் காட்சி
குடமிசைக் கொண்டொரு கூன்மிடை கிழவன்
நெடுநிலைக் கம்பத்தின் வடமிசை நடந்தென
இறும்பூது பயக்கு நறும்பணை மருதக்
கன்னிமதி லுடுத்த காசிமா நகரம்
பெருவளஞ் சுரக்க வரசுவீற் றிருக்கும்
மழுவல னுயர்த்த வழனிறக் கடவுள்
பொன்னடி வணங்கி யின்னிசை பாடலும்
அந்நிலைக் கண்ணே யகல்விசும் பொரீஇச்

சுரபியுந் தருவும் பெருவளஞ் சுரப்ப
இருமையும் பெற்றனன் யானே நீயுமத்
திருநகர் வளமை பாடி யிருநிலத்
திருநிதிக் கிழவனேக் கறுப்பத்
திருவொடும் பொலிக பெரும்கிழ் சிறந்தே.

## வண்டுவிடு தூது

59. (அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்)

சிறைவிரிக்கு மதுகரங்கா டேம்பிழிபூம்
பொழிற்காசித் திருநா டாளும்
மறைவிரிக்குஞ் சிலம்படியார் திரள்புயத்துப்
புரளுநறு மலர்ப்பூங் கொன்றை
நறைவிரிக்கு மிதழ்க்கரத்தா லூட்டுமது
விருந்துண்டு நயந்து மற்றென்
குறைவிரித்தோ ரிருவரிசை கூட்டுண்ணுந்
திருச்செவிக்கே கூறு வீரே.

60. (கட்டளைக் கலித்துறை)

கூற்றடிக் கஞ்சிக் குலையுநெஞ்
சேயஞ்சல் கோச்செழியன்
மாற்றடிக் கஞ்சு மிடப்பா
கணைமள்ளர் கொன்றகருஞ்
சேற்றடிக் கஞ்ச மலர்வயற்
காசிச் சிவக்கொழுந்தைப்
போற்றடிக் கஞ்சலி செய்பற்று
வேறு புகலில்லையே.

61. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

இலைமுகங் குழைத்த பைம்பூ
　　ணேந்திள முலையோ டாடும்
மலைமுகங் குழைத்த காசி
　　வரதர்கண் டிலர்கொன் மாரன்
சிலைமுகக் கணைக்கெம் மாவி
　　செகுத்துண வருத்தத் திங்கட்
கலைமுகம் போழ்ந்த காயங்
　　களங்கமாய் விளங்கு மாறே.

62. (கட்டளைக் கலித்துறை)

விளங்கனி யொன்றெறி வெள்விடை
　　யோடும் விழிக்கணுழைந்
துளங்கனி யப்புகுந் தாய்விர
　　கானலத் துற்றதென்னும்
வளங்கனி பண்ணை வயல்சூ
　　ழவிமுத்த வாண நறுங்
களங்கனி யென்றுமை கைக்கிளி
　　பார்க்குங் கறைக்கண்டனே.

63. (ஆசிரியவிருத்தம்)

கண்ட மட்டு மிருண்டு பாதி
　　பசந்து பாதி சிவந்துளார்
காசி நாதர் கரத்து வைத்த
　　கபால மொன்றல தில்லையால்

உண்டு கோடியின் மேலு மையர்
பதம்பெ றக்கட வாரவர்க்
கொவ்வொ ருத்தர் கரத்தி லொவ்வொர்
கபாலம் வேண்டு மதற்கெலாம்
பண்டி ருந்த விரிஞ்சன் மார்தலை
மாலை யுஞ்செல வாய்விடிற்
பார மென்றலை மேல்வ ருங்கொ
லெனுங்க வற்சியி னுற்பசுங்
கொண்டல் வண்ணர் துயில் கொள்ள வுந்துயி
லார்பி தாமக னுரெனுங்
கொள்கை கண்டும் விழைந்த வாவவர்
பதஞ்ச மீரகு மாரனே.

64. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

கும்ப மிரண்டு சுமந்தொசியுங்
கொடிநுண் மருங்கு லிறுமிறுமென்
றம்பொற் பசுங்கொம் பன்னுளை
யாகத் தணைத்த வகிலேசர்
செம்பொ னிதழித் தெரியலையே
சிந்தித் திருப்பத் திரண்முலையும்
பைம்பொ னுருவும் பீர்பூத்த
பவளச் செவ்வாய்ப் பசுங்கிளிக்கே.

65. (கட்டளைக் கலித்துறை)

கிள்ளைக் கமிர்த மொழிசாற்
றிடுங்கிஞ் சுகவிதழ்ப்பெண்

பிள்ளைக் கிடந்தந்த காசிப்
பிரான்பிறை யோடுமுடிக்
கொள்ளைச் சிறைவண்டு கூட்டுணுங்
கொன்றையுங் கூடவைத்தார்
வள்ளக் கலச முலைக்கங்கை
யாளுயிர் வாழ்வதற்கே.

66. (கலிவிருத்தம்)

வாட்ட டங்கண் மழைப்புனன் மூழ்கியே
சேட்டி ளங்கொங்கை செய்தவ மோர்கிலார்
தோட்டி னங்கொன்றை சூடிப்பொ னம்பலத்
தாட்டு வந்த வவிழுத்த வாணரே.

67. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

நரைமு திர்ந்தன கண்கள்பஞ்
சார்ந்தன நமன்றமர் வழிக்கொண்டார்
திரைமு திர்ந்துட றிரங்கின
திரங்கலை செயலிது மடநெஞ்சே
உரைமு திர்ந்தவர் குழாத்தொடு
மடைதியா லொழுகொளி முடிக்கங்கைக்
கரைமு திர்ந்திடாக் கலைமதி
முடித்தவர் காசிநன் னகர்தானே.

68. (வஞ்சித்துறை)

நகர மாய்மறைச், சிகர மானதால்
மகர மாயினுன், நிகரில் காசியே.

69. (கட்டளைக் கலித்துறை)

இல்லொன் றெனவெ னிதயம்புக்
காய்மத னெய்கணைகள்
வல்லொன்று பூண்முலை மார்பகம்
போழ்வன மற்றென்செய்கேன்
அல்லொன்று கூந்த லணங்கர
சோடுமொ ராடகப்பொன்
வில்லொன்று கொண்டவி முத்தத்தி
லேநின்ற விண்ணவனே.

## கைக்கிளை

70. (மருட்பா)

விண்ணமிர்து நஞ்சாம் விடமு மமிர்தமாம்
உண்ணமிர்த நஞ்சோ டுதவலாற் – றண்ணென்
கடலொடு பிறந்தன போலுந் தடமலர்க்
கடிநகர்க் காசியுண் மேவும்
மடலவிழ் கோதை மதர்நெடுங் கண்ணே.

## ஊர்

71. (வஞ்சிவிருத்தம்)

கண்ணெ டாவி கருத்துமாய்
உண்ணி றைந்ததொ ரொண்பொருள்
அண்ணு மாநக ரானதால்
அண்ண லாரவி முத்தமே.

72. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

முத்தாடி மடித்தலத்தோ ரிளஞ்சேயை
யுலகீன்ற முதல்வி யோடும்
வைத்தாடு வீர்பொதுவி னின்றுடு
மமக்கிந்த வார மென்னே
கொத்தாடு சடையொடுமா னந்தவனத்
தேகுறுந்தா ணெடும்பூ தத்தோ
டொத்தாடு வீரடிகட் கெல்லோமும்
பிள்ளைகளென் றுணர்ந்தி டீரே.

## சம்பிரதம்

73. (ஆசிரியவிருத்தம்)

உண்டகில கோடியு மமிழ்ந்திடுவன்
முகிலேழு மொக்கப் பிழிந்துகடலே
ழுடன்வாய் மடுத்திடுவன் வடமேரு
மூலத் தொடும்பிடுங் கிச்சுழற்றி
அண்டபகி ரண்டமு மடித்துடைப்
பன்புவன மவையேழு பிலமேழுமாய்
அடைவடை வடுக்கிய வடுக்கைக்
குலைப்பனிவை யத்தனையும் வித்தையலவால்
கொண்டன்மணி வண்ண னு முண்டகக்
கண்ணனும் குஞ்சிதச் செஞ்சரணமும்
குடிலகோ டீரமுந் தேடியத
லமுமண்ட கோளமுந் துருவியோடப்

பண்டைமறை யோலமிட வெளியினட
மாடும் பரஞ்சுடர் பொலிந்தகாசிப்
பதியிலடை யாமலிப் பல்லுயிர்த்
தொகுதியும் பரமபத மடைவிப்பனே.

74. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

விரைகுழைக்கு மழைமுகில்காள் விண்டலர்தண்
டுழாய்ப்படலை விடலை யென்ன
அரைகுழைக்கும் பொழிற்காசி யணிநகருக்
கேகுதிரே லறன்மென் கூந்தல்
வரைகுழைக்கு முலைகுழைப்பக் குழைதிரடோ
ளழகுமுடி வணங்கி யென்னக்
கரைகுழைக்கு மலைகுழைத்த கண்ணுதற்கென்
பேதைதிறங் கழறு வீரே.

75. (கட்டளைக் கலித்துறை)

கழைக்கரும் பைக்குழைத் தான்மத
வேளக் கணத்திலம்பொற்
குழைக்கரும் புங்குழைந் திட்டதந்
தோகுளிர் தூங்குதுளி
மழைக்கரும் பும்பொழிற் காசிப்
பிரான்மலை யாண்முலைபோழ்
முழைக்கரும் புற்றர வாடநின்
ருடிய முக்கணனே.

76. கண்ணஞ் சனத்தைக் கரைத்தோடு
நீர்கடல் செய்யநின்ருள்

உண்ணஞ் சனத்துக்கு மஞ்சவைத்
தாரும்ப ரோட்டெடுப்பப்
பண்ணஞ்ச நச்சமிர் தாக்கொண்ட
காசிப் பரமர்பச்சைப்
பெண்ணஞ்ச ஞச்சர வார்த்துநின்
ருடுமப் பிஞ்ஞகரே.

77. (கட்டளைக் கலிப்பா)

கருகு கங்குற் கருப்பக டூர்ந்துவெண்
கலைம திக்கொலைக் கூற்றங் கவர்ந்துயிர்
பருகு தற்குக் கரத்தால் விரிநிலாப்
பாசம் வீசி வளைத்ததிங் கென்செய்வேன்
முருகு நாறு குழற்பொலங் கொம்பனீர்
முத்தர் வாழவி முத்தமு நெக்குடைந்
துருகு பத்தர்தஞ் சித்தமுங் கோயிலா
வுடைய நாதற் குரைத்திடு வீர்களே.

ஊர்

78. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

உரைத்த நான்மறைச் சிரத்துமைந்
தவித்தவ ருளத்தும்வண் டொருகோடி
நிரைத்த பூங்குழ னிரைவளை
யவளொடு நின்றவ ருறைகோயில்
குரைத்த தெண்டிரைக் கங்கைமங்
கையர்துணைக் கொங்கைமான் மதச்சேற்றைக்

கரைத்தி ருங்கடல் கருங்கட
லாச்செயுங் காசிமா நகர்தானே.

79. (கட்டளைக் கலிப்பா)

மான மொன்று நிறையொன்று நாணொன்று
மதிய மொன்று குயிலொன்று தீங்குழற்
கான மொன்று கவர்ந்துணு மாமதன்
கணைக்கி லக்கென் னுயிரொன்று மேகொலாம்
வான மொன்று வடிவண்ட கோளமே
மவுலி பாதல மேழ்தாண் மலையெட்டும்
நான மொன்று புயமுச் சுடருமே
நயன மாப்பொலி யும்மகி லேசனே.

80. (நேரிசை வெண்பா)

அகிலாண்ட மாயகண்ட மானவகி லேசா
முகிலாண்ட சோலையவி முத்தா—நகிலாண்ட
சின்னவிடைப் பாகா திருநயனஞ் செங்கமலம்
அன்னவிடைப் பாகா வருள்.

81. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

அருகுமதன் குழைத்தகழை தெறித்தமுத்தே
றுண்டெழுவண் டரற்று மோசை
பெருகுசிறு நாணொலியென் றறிவழிந்து
பேதுறுமிப் பேதைக் கென்னும்
உருகுபசும் பொன்னசும்பு தசும்புவிசும்
பிரவியென வுடைந்து கஞ்சம்

முருகுயிர்க்கும் பொலங்குடுமி விமானத்திற்
பொலிந்தவவி முத்த னாரே.

82. (கட்டளைக் கலித்துறை)

முத்திக்கு வேண்டவர் மோட்டுடற்
பார முடைத்தலையோ
டத்திக்குஞ் சாம்பற்கு மோம்பின
ராலிவை யன்றியப்பாற்
சித்திப் பதுமற் றிலைபோலுங்
காசிச் சிவபெருமான்
பத்திக்குக் கேவல மேபல
மாகப் பலித்ததுவே.

83. (கலிநிலைத்துறை)

பல்வே றுருவாய் நின்றருள் காசிப் பதியுள்ளீர்
வில்வே றில்லை பூவல தம்பும் வேறில்லை
அல்வே றல்லாப் பல்குழ லாரை யலைக்கின்றான்
சொல்வே றென்னே பாரு மனங்கன் றொழிலானே.

84. (கட்டளைக் கலித்துறை)

தானென் றவர்மு னொளித்தோடித்
தன்னை யிழந்தவர்முன்
யானென்று சென்றிடுங் காசிப்
பிரானுடம் பென்பதென்போ
டூனென்று விட்டொழிந் தார்களிப்
பாருவட் டாதவின்பத்

தேனென் றடைந்தவர்க் குண்ணக்
கிடைப்பது தீவிடமே.

85. (கட்டளைக் கலிப்பா)

தீவி டங்கொடுத் தேயமு துண்டவத்
தேவ ருக்கொளித் துத்திரி கின்றநீர்
பாவி டும்மலர்ப் பஞ்சணை மேலிவள்
பவள வாயமிர் துண்டாற் பழுதுண்டோ
நாவி டங்கொண் டொருவன் முகங்களோர்
நான்கி னுந்நடிக் குந்துர கத்தைவிட்
டாவி டங்கொண் டருட்காசி வீதிக்கே
யாடல் செய்திடு மானந்தக் கூத்தரே.

86. (நேரிசை வெண்பா)

ஆனந்த வல்லியுட னானந்தக் கானகத்தே
ஆனந்தக் கூத்தா டருட்கடலை—ஆனந்தம்
கொள்ளத் திளைத்தாடுங் கூடாதே லிப்பிறவி
வெள்ளத் திளைத்தாடு வீர்.

87. (கலிவிருத்தம்)

வீர மென்பது வின்மதற் கேகுணம்
சோர மென்பது கொண்டிருந் தாவதென்
ஈர மென்ப திலையிவர்க் கென்றதால்
வார மென்பதி வாழவி முத்தரே.

88. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

முத்து நிரைத்த குறுநகையீர்
முளரிக் கணையான் கணைகடிகைப்
பத்து நிரைத்தா னினித்தொடுக்கிற்
பாவைக் கொருதிக் கிலேபோலும்
ஒத்து நிரைத்த வுடுநிரையோ
டொன்றோ பலவோ வெனவரும்பூங்
கொத்து நிரைத்த பொழிற்காசிக்
குழகற் கொருவர் கூறீரே.

89. (கட்டளைக் கலித்துறை)

கூற்றடிக் கஞ்சி முறையோ
வெனக்குல நான்மறையும்
போற்றடிக் கஞ்சம் புகலடைந்
தேமுனைப் போலவைத்தாற்
சேற்றடிக் கஞ்ச வயற்காசி
நாத செருப்படிக்கும்
மாற்றடிக் குந்தொண்டர் வில்லடிக்
கும்புகன் மற்றில்லையே.

90. (கட்டளைக் கலிப்பா)

இல்லை யென்ப திலையோர் மருங்கிலே
யெவ்வ றங்களு முண்டோர் மருங்கிலே
கொல்லு கின்ற தெழுதருங் கூற்றமே
கூறு மாற்ற மெழுதருங் கூற்றமே

வில்லு மேற்றிடு நாணும்பொன் னகமே
விடுக ணைக்குண்டு நாணும்பொன் னகமே
மல்லன் மார்பின் மணிமுத்த மென்பதே
வாச மையர்க் கவிமுத்த மென்பதே.

91. (கலிவிருத்தம்)

என்ப ணிக்கும் பணியென் றிரந்தபோ
தென்ப ணிக்கும் பணிதிக்கு மேக்கென்றார்
என்ப ணிக்கும் பணியா விருந்ததோர்
என்ப ணிக்குமின் பாமகி லேசர்க்கே.

92. (நேரிசை வெண்பா)

கேயூர மூரக் கிளர்தோ ளகிலேசர்
மாயூர மூருமொரு மைந்தற்குத்—தீயூரும்
அவ்வேலை யீந்தா ரடித்தொழும்பு செய்தொழுகும்
இவ்வேலை யீந்தா ரெமக்கு.

93. (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

குருகை விடுத்தா ளெனக்குருகே
கூறாய் சுகத்தை விடுத்தாளென்
றருகு வளருஞ் சுகமேசென்
றறையாய் நிறைநீர் தெரிந்துபால்
பருகு மனமே யனம்விடுத்த
படிசென் றுரையாய் படிவருளத்
துருகு பசும்பொன் மதிற்காசி
யுடையார் வரித்தோ லுடையார்க்கே.

94. உடுத்த கலையு மேகலையு
மொழுகும் பணியும் விரும்பணியும்
தொடுத்த வளையுங் கைவளையுந்
துறந்தா ளாவி துறந்தாலும்
அடுத்த துமது பரந்தாம
மதனு லிதழிப் பரந்தாமம்
விடுத்து விடுவா ளலளெனப்போய்
விளம்பீர் காசி வேதியர்க்கே.

95. (நேரிசை வெண்பா)

வேதத் துரகர் விரக ரகிலேசர்
பாதத் துரகப் பரிபுரத்தார்—நாதரிவர்
சேவடிக்கண் டாரே திறம்பிழைத்துத் தென்புலத்தார்
கோவடிக்கண் டாரே குலைந்து.

96. (கட்டளைக் கலித்துறை)

குலைவளைக் கும்பழுக் காய்முழுத்
தாறு கொழுங்கமுகின்
தலைவளைக் கும்பொழிற் காசிப்
பிரான்றடங் கோட்டுப்பைம்பொன்
மலைவளைக் கும்புயத் தாண்மையென்
ஞந்தெவ் வளைந்துகழைச்
சிலைவளைத் துத்தன் படைவீ
டமர்க்களஞ் செய்திடினே.

97. (ஆசிரியவிருத்தம்)

இடம ருங்கினின் மருங்கி லாதவவள்
குடியி ருக்கவு முடியில்வே
றிவளொ ருத்தியை யிருத்தி வைத்துமதி
மோக மோகினியி னுருவமாய்
நடமி டிங்கிவடன் மேலும் வைத்துள
நயந்தொர் பிள்ளை பயந்தநீர்
நங்கு லத்திருவை மருவி னின்றுபிறர்
நாவ ளைக்கவிட மாகுமோ
சூடமு டைந்ததென வானி னங்கண்மடி
மடைதி றந்துபொழி பாலொடும்
கொழும டற்பொதி யவிழ்ந்து கைதைசொரி
சோறு மிட்டணி திரைக்கையாற்
கடல்வ யிற்றினை நிரப்பு கின்றசுர
கங்கை குண்டகழி யாநெடுங்
ககன நீள்குடுமி மதில்க ளேழுடைய
காசி மேவுமகி லேசரே.

## மடக்கு

98. (பன்னிருசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

சரியோ டொழுகுங் கரவளையே
சரக்கோ டொழுகுங் கரவளையே
தையற் கனமே தீவிடமே
தவழுங் கனமே தீவிடமே
சொரிவ தடங்காக் கண்ணீரே
துளிக்குந் தடங்காக் கண்ணீரே

துயரே வதித னந்தினமே
சூரற் கழுத்தி னந்தினமே
கருகிப் புலர்ந்த நாவாயே
கரைவந் திழியு நாவாயே
கண்க ளுறங்கா கழுநீரே
கடலே கழியே கழுநீரே
அரிவை யிவளுக் குருகீரே
யனத்தோ டுறங்குங் குருகீரே
அளியா ரிதழி வனத்தாரே
யருளா னந்த வனத்தாரே.

99. (சந்த விருத்தம்)

வனத்தினுமொர் பொற்பொதுமு கப்பினு நினைப்பவர்
மனத்தினுந டித்த ருள்செய்வார்
சினக்கயல் விழிக்கடை கருக்கொள்கரு ணைக்கொடி
திளைத்தமரு மத்த ரிடமாம்
நனைக்கமல நெக்குடை தரக்குடை துறைச்சுர
நதிக்கரையின் முட்டை கொலெனுக்
கனத்தபரு முத்தினை யணைத்தன மினத்தொடு
களிக்குமவி முத்த நகரே.

100. (வேறு)

கருமுகில் வெளுப்பவற விருளுமள கத்தினிவள்
கதிர்முலை முகட்டணைய வணைமீதே
வருகில ரெனிற்செவியி லொருமொழி சொலச்சமயம்
வருகென வழைக்கினுடன் வருவார்காண்

சுரநதி சுருட்டும்விரி திரைகளொரு முத்திமக
டுணைமுலை திளைக்குமவர் மண நாளின்
முரசொடு முழக்குகுட முழவென விரைக்கவளை
முரலுமவி முத்தநக ருடையாரே.

101. (நேரிசை யாசிரியப்பா)

உடைதிரைக் கங்கை நெடுநதித் துறையின்
வலம்புரி யென்னவாங் கிடம்புரி திங்கள்
வெள்ளிவீ ழன்ன விரிநிலாப் பரப்பும்
பொன்வீ ழன்ன புரிசடைக் கடவுள்
முடவுப் படத்த கடவுட் பைம்பூண்
கறங்கெனச் சுழலுங் கால்விசைக் காற்று
துமிழ்தரு குருதித் திரடெறித் தாங்குத்
திசைதொறுந் தெறித்த திரண்மணிக் குலங்கள்
வானேறு சடுப்ப வெரிநிற் றுக்கலும்
கையெடுத் தெண்டிசைக் களிறும் வீரிடத்
தெய்வநா டகஞ்செய் வைதிகக் கூத்தன்
வரைபகப் பாயும் வானரக் குழாத்தொரு
கருமுக மந்தி கால்விசைத் தெழுந்து
பழுக்காய்க் கமுகின் விழுக்குலை பறித்துப்
படர்தரு தோற்றஞ் சுடரோன் செம்மல்
தெசமுகத் தொருவன் றிரண்முடி பிடுங்கி
விசையிற் பாய்ந்தென விம்மிதம் விளைக்கும்
தடமலர்ப் படப்பைத் தண்டலைக் காசிக்
கடிநகர் புரக்குங் கண்ணுதற் செல்வன்
வேம்புங் கடுவுந் தேம்பிழி யாகச்

செஞ்செவி கைப்பயான் றெரித்த சின்மொழி
அஞ்செவி மடுத்தாங் களித்தன னதனுல்
வேத்தவை வியப்ப விரைத்தேன் பில்கும்
தேத்தமிழ் தெளிக்குஞ் செந்நாப் புலவீர்
மண்மகள் கவிகைத் தண்ணிழற் றுஞ்சப்
புரவுபூண் டிந்திர திருவொடும் பொலிந்து
முடிவினு முடியா முழுநலங் கொடுக்கும்
செந்நெறி வினவுதி ராயி னின்னிசைப்
பாத்தொடுத் தடுத்த பரஞ்சுடரை
நாத்தழும் பிருக்க வேத்துமி னீரே.

---

43
9-58

சிவாயநம

# குறிப்புரை

1. நேசம் - அன்பு. வரை - இமவான். கன்னிப் பிடி - உமை.

2. (1) பெருந்தடங்கண் - விசாலாட்சியம்மை. பெண்ணமிர்து - கங்கை. அமரர்கம்மியன் - விசுவகர்மா. பொலம் - பொன்.

(2) களைகண் - துன்பத்தைப் போக்குவார். பழங் கண் - துன்பம். பழமறையின் முதலெழுத்து - பிரணவம்.

1. ஓரெழுத்து - பிரணவம்.

3. செடி - நாற்றம். முடை - புலால் நாற்றம். புழுக்கூடு என்றது உடலை.

4. பரந்தாமம் - முத்தி. இறும்பூது - வியப்பு.

6. பலி - பிச்சை. காணி - உரிமை.

**அம்போதரங்கம்:** பூண்முலை - உமை. எண்வகை யுறுப்பு - அட்டமூர்த்தம். வடவரை - மேரு. உரிவை - தோல். பவம் - பிறவி. அலகு - அளவு. இருள் - அஞ்ஞானம்.

**தாழிசை:** அடங்கலும் - முழுதும். உண்டொழிப் பாய்க்கு - சங்காரம் செய்யும் உனக்கு. வீறு - சிறப்பு. எயின் மூன்று - திரிபுரம். முக்குறும்பு - காமம், வெகுளி, மயக்கம். இக்கு - கருப்பஞ்சாறு. கூற்று - பகுதி. கூற்றம் - இயமன். குமைத்தனை - அடக்கினாய்.

**சுரிதகம்:** குழவி - முருகப் பெருமான். குமுதம் - தாமரை. எழுதாக் கிளவி - வேதம். விழைகுவாய் - விரும்புவாய்.

3. கடையில்-உடலைவிட்டபொழுது. செவ்வண்ணம் பெற்றோர் திரள் - சாரூபம் பெற்ற அடியார் கூட்டம். நிற்கின்றாரை - சிவபெருமானை.

4. இறைவளை - உமை. உருகீர் என்று சென்று கூறிடுமே. தூமொழி - தலைவி.

5. இறையவள் - உமை. சமர் - போர். மலடி - பிட்டுவாணிச்சி. இடியல் - பிட்டு. கொட்டு - மண்வெட்டி. இரு கவிஞர்கள் - தும்புரு நாரதர். பனுவல் - இசைப் பாடல். வலயம் - தோள்வளை. வரை - மேருமலை. மலர் மகள் - இலக்குமி. சரம் - (திருமாலாகிய) அம்பு. இதழி - கொன்றை. நரகரி - நரசிங்கம். உரியதள் - உரித்த தொல். வெற்பு - மேருமலை. குடவளை - வளைந்த சங்கு. உடு - நட்சத்திரம். சினை - முட்டை. பரநதி - கங்கை. அவிமுத்தம் - காசி. வனமுலை - உமை. கொழுநர் - கணவர்.

6. காந்தன் - கணவன். வையகம் - உலகம்.

7. மறை - வேதம். கறை - கறுப்பு.

8. வாளி - அம்பு. வீணன் - மன்மதன். ஆனந்த வனம் - காசி.

9. வெள்ளிப் பொருப்பு - கயிலைமலை. புவனம் - உலகம். துடைத்து - அழித்து.

10. இதழித்தார் - கொன்றைமாலை. எழுத்தொன்று - பிரணவம். தோகை - பெண்.

11. காமாந்தகர்; கண்ணுதலார் - சிவபெருமான்.

12. கடுக்கை - கொன்றை. வெறுங்கூட்டில் - உயிர் போன உடலில்.

13. முந்நீர் - கடல். சேய் - முருகன்.

14. வரை - மேருமலை. மைந்தர் - வலிமை பொருந்திய சிவபெருமான். இறைஞ்சாதவராகிய இவர் மைந்தர்க்கு ஆர் என்க.

15. வேள் - மன்மதன். உரகப்பணியீர் - பாம்பாகிய அணிகலம் உடையவரே.

16. பெண்ணொடு - உமையோடு. பிச்சன் - சிவபெருமான். குறுமூரல் - புன்சிரிப்பு. புரம் - திரிபுரம்; உடம்பு.

18. பெற்றம் - இடபம். செற்று - அழித்து.

19. இல்லாள் - உமை. செல்ஆர் - மேகம் தவழும். புண்ணீர் - இரத்தம். ஐயம் - பிச்சை.

21. பெண்ணோடு - உமையோடு. உள்ள மாதனம் - உள்ளம் ஆகிய பெரிய செல்வம்.

22. கைச்சங்கம் - கையிலுள்ள வளையல், சங்கு. ஆழி - மோதிரம், சக்கரம். மால் ஆயினேம் - மயக்கம் அடைந்தேம்.

23. நெடுந்துயில் - இறத்தல். பயல் - பக்கம். புவனம் படைப்பவர் - பிரமன்.

24. அற - மிகவும். கடு - விஷம். களத்தர் - கண்டமுடையவர் - சிவபெருமான்.

25. திருக்கோலம் - திருவின் அழகு. நீலக்குழல் - விசாலாட்சியம்மை. இருக்கு - வேதம்.

26. பீர் - பசலை. பொன் - தலைவி. சுரும்பர் - வண்டு. பொலம் - பொன்.

27. பண்நேர் - பண்ணைத் தருகின்ற. ஒருவன் - மன்மதன். கழுநீர் - குவளையாகிய அம்பு.

28. தலைக்கலன் - தலைமாலை. நுதல்விழி - நெற்றிக் கண். இடக்கண் - சந்திரன். கனல்விழி - நெற்றிக் கண். ஓர்விழி - இடக்கண்.

29. கஞ்சுகம் - சட்டை. மா லயம் - மகா சங்காரம். உளம் ஆலயம் - உள்ளம் கோயில். பணி - அணிகலம். என்பு - எலும்பு. என் பணி - என் தொண்டு. மழகளிறு ஈன்றவள் - உமை. களிறு - விநாயகர். பதி - கணவன்.

30. அரும் புவனங்கள் - அரிய உலகங்கள். வாசம் - இருப்பிடம். வாசம் அரும்பு - வாசனை தோன்றுகிற. வனங்கள் - காடுகள். அம்கம் - அழகிய துவாத சாந்தத் தானம். மாது - உமை. மருக்கொன்றை - வாசனைதரும் கொன்றை. தருமருக்கு - அடியார்க்கு. ஐயர் - சிவ பெருமான். ஒன்று - முத்தி. திருக்கு - மாறுபாடு. ஒயில் - நீங்கினால்.

31. கூற்று - இயமன். எயிறு - பல். கடைநாள் - யுகாந்த காலத்தில். திரை - கடல். முழுநீத்தம் - பிரளய வெள்ளம். புணை - தெப்பம்.

32. பா அலரும் - பாக்கள் தோன்றுகின்ற. நாவலர் - புலவர். நாவலர் பனையேடுகளாகிய புத்தகத்தை அவிழ்ப் பர்; வண்டுகள் பண்பாடுதலால் இதழ்களை விரியச் செய்யும். கஞ்சசம் கரத்தான் - தாமரை மலர்போன்ற கையுடையவன். அஞ்சு அக்கரம் - திருவைந்தெழுத்து.

33. அவிமுத்தம் - காசி. ஆகம் - திருமேனி. பரம் - முத்தி. அம்பரம் கலை - திசையே ஆடை.

34. மால் - திருமால்; மயக்கம்.

35. அம்மனை - உமை. மனை யா - தேவியாக. எம் அனை - எம்முடையதாய். ஏக்கறுப்பீர் - ஆசைகொண்டு இருப்பீர். சொம் - சொத்து.

36. தொண்டர் - சுந்தரர். புண்டரிகப்பதம் - திருவடிப்பேறு. இருவர் - மாலும் பிரமனும்.

37. ஏடு - இதழ். ஆடகம் - பொன். அன்பர் - அடியார்; திருமால். இரும்பை ஆடகமாக்கி - இரும்பைப் பொன்னுக்கி; (காளிங்கனின்) படத்தை நர்த்தனம் செய்யும் இடம் ஆக்கி. இருப்புக்கல் கனகமாக்கி - இரும்பு மலையைப் பொன்னுக்கி; இருப்பிடத்தை மேரு மலையாகச் செய்து.

38. துணர் - கொத்து. நிலாக்கொழுந்து - பிறை. பாந்தள் - பாம்பு. வள்ளம் - கிண்ணம். கிஞ்சுகம் - முள்ளுமுருங்கைபோல. எகினம் - அன்னம். மறைக் கிழவ - பிரமனே. எயிறு - பல். மிடறு - கழுத்து. கமம் - நிறைந்த. யாத்து - கட்டி. குருதி - இரத்தம். பழுக் காய் - பாக்கு. மங்குல் கண்படுக்கும் - மேகம் தூங்கும். பொதும்பர் - சோலை. ஏல்வை - காலம். மாமுதல் - சூரன். குழவி - முருகன். களிறு - விநாயகர். அழுக் கறுப்ப - பொருமை கொள்ள. மடந்தை - விசாலாட்சி யம்மை. தோகை - முன்றுனை. குஞ்சித அடி - தூக்கிய திருவடி.

39. புன்குரம்பை - உடம்பு. பரந்தாமம் - முத்தி. புக்கில் - வீடு. இடையவள் - உமை.

40. அன்பர் - கண்ணப்பர். மிச்சில் - எச்சில். மறுத்தவிரவில்லை - மறத்த இரவு இல்லை; மறுத் தவிர இல்லை. (மறு - குற்றம்)

41. கடுக்கை - கொன்றை. கொல்வார் - சண்டேசர்.

42. பேணுக என்ன - காப்பாயாக என்று. அள்ளல் - சேறு. பெருந்தகைமை - வள்ளன்மை.

43. காசிக்குழகர் - விசுவநாதப்பெருமான். மகற்கு - முருகனுக்கு. மகள் கொடுத்த - வள்ளியைக் கொடுத்த.

44. கள்வன் என்றது சிவபெருமானை. புணர்ப்பை - வஞ்சனையை. கண்ணி என்றது தலைவியை.

45. தறுகண் - அஞ்சாமை. தொட்டு - அகழ்ந்து. கொடிறு - கன்னம். நாசி - மூக்கு.

46. தேக்கும் - நிறைக்கும். உடைந்து - தோற்று. வச்சைமாக்கள் - உலோபிகள். அலவன் - நண்டு.

47. தளிர் இடை என்றது தலைவியை. கழை - கரும்பு.

48. கணம் - (சாரூபம் பெற்றவருடைய) கூட்டம். எண் கண்ணன் - பிரமன். கண்ணன் - திருமால்.

49. பைம்பொன்வில் - மேருவாகிய வில். அல்லாண்ட - கருமைபொருந்திய.

50. நுசுப்பு - இடை. பெருந்தடங்கட்பைந்தேன் - விசாலாட்சி. படை வீடு - கோயில்.

51. படலை - மாலை. கடுக்கை - கொன்றை. மறுகு - தெரு. தொடலை - மாலை.

52. பணி - தொண்டு. நல்கும் - அருள் பாலிக்கும். கடம் - மதம். களிற்றுரியா - சிவபெருமான். குடங்கை - உள்ளங்கை. அன்னீர் - போன்றவர்களே.

53. புண்டரிகம் - தாமரை. கடுக் கை - விடத்தைக் கையால். கடுக்கை - கொன்றை.

54. இரண்டு வடிவு - ஆண் பெண். பொலம் - பொன். தாமம் - மாலை. விரை - மணம்.

55. கிளை - உறவினர். இதழித்தார் - கொன்றை மாலை.

56. சாதனம் - தண்டனை. நல்கா - அளிக்காத. பரந்தாமம் - முத்தி.

57. வரம் - மேன்மையுடைய. தாமம் - மாலை. புரம் தாமத்தைப் பொருதரு - வீடுகள் மலைகளை யொத்து இருக்கின்றன. மத்தை இரந்தாம் - ஊமத்த மலரையேனும் யாசித்தோம். புகலீர் - சொல்லுங்கள்.

58. உறைப்ப - துளிக்க. உகிர் வடிம்பின் - நகத்தின் விளிம்பினால். தெள்விளி - தெளிந்த பாட்டு. இறைமகன் - அரசன். பழிச்சுவது - பழிப்பது. நலம்பாடு - இன்பம். இலம்பாடு - வறுமை. சிதலை - கறையான். சிலம்பி - சிலந்தி. குரம்பை - குடிசை. மசகம் - கொசுகு. உணங்கி - வாடி. கொடிறு - கன்னம். விழுமம் - துன்பம். களைகண் - துன்பத்தைப் போக்குபவர். அலமரும் - மனம் சுழலும். ஏல்வை - எல்லை. தேம் - தேன்கூடு. படப்பை - தோட்டம். நான்றன - தொங்கினவாகி. கதலி - வாழை. இறும்பூது - வியப்பு. ஒரீஇ - நீங்கி. சுரபி - காமதேனு. தரு - கற்பகமரம். இருநிதிக்கிழவன் - குபேரன். ஏக்கறுப்ப - வருந்த.

59. தேம்பிழி - தேனைப் பிழிகின்ற. மதுகரங்காள் - வண்டுகளே. இருவர் - தும்புரு, நாரதர்.

60. அஞ்சல் - அஞ்சாதே. செழியன் - அரிமர்த்தன பாண்டியன். மாற்றடி - பிரம்படி. கொன்ற - உழுத. சேற்றடிக்கஞ்சம் - சேற்றில் வளரும் தாமரை.

61. வரதர் - சிவபெருமான். மாரன் - மன்மதன். ஆவியைச் செகுத்து உணவாக அருந்த என்க. மன்மதன் எம் ஆவியை அழிப்பதற்குமுன் சந்திரனின் கலை பொருந்திய முகத்தின்மேல் அம்பு எய்தான்; அதன் முகத்தில் உண்டான புண் களங்கம்போல் காணப்படுகின்றது. இதனைக் காசிவரதர் கண்டிலர் கொல்?

62. வெள்விடை - திருமால். விரகானலம் - விரகத்தீ.

63. விரிஞ்சன்மார் - பிரமர்கள். கவற்சி - கவலை.

பசுங்கொண்டல் வண்ணர் - திருமால். பிதாமகனுர் - பிரமன். சமீரகுமாரன் - வாயுமகனுகிய அனுமான்.

64. கும்பம் - கொங்கை. மருங்குல் - இடை. இறும் - உடையும். பசும் கொம்பன்னுள் - உமை. இதழி - கொன்றை. தெரியல் - மாலே. பீர் - பசலே. பசுங்கிளி என்றது தலேவியை.

65. கிள்ளே - கிளி. கிஞ்சுகம் - முள்ளுமுருங்கை. பெண்பிள்ளே - உமை.

66. ஓர்கிலார் - அறிந்து அருள்செய்திலர்.

67. இரங்கலே - வருந்தாதே. உரை முதிர்ந்தவர் - கல்வியில் வல்லவர்.

68. மகரம் - ஆணவம். மாயினுன் - மாய்த்தவன்.

69. போழ்வன - பிளப்பன. வல் - வட்டு. அல் - இருள். அணங்கரசு - உமை.

72. சேய் - முருகன். உலகீன்ற முதல்வி - உமை. போது - சபை. வாரம் - பட்சபாதம். உணர்ந்திடீர் - உணர்வீராக.

73. முண்டகக் கண்ணன் - பிரமன். குஞ்சிதச் செஞ்சரணம் - தூக்கிய திருவடி. குடிலகோடீரம் - வளேந்த சடை. துருவி - தேடி.

74. விரைகுழைச்கும் - வேகமாகச் செல்லும். படலே - மாலே. விடலே - திருமால். அரை குழைக்கும் - அரை என்னும் மரம் தளிர்க்கின்ற. அறன் மென் கூந்தல் - உமை. மலேகுழைத்த - மேருமலேயை வளேத்த. கண்ணுதல் - சிவபெருமான்.

75. குழைத்தான் - வளேத்தான். பொற்குழைக்

கரும்பு - தலைவி. மழைக்கு அரும்பும். முழைக் கரும் புற்று - தழும்பாகிய புற்று.

76. அஞ்சனம் - மை. கடல் செய்ய - கடல்போலப் பெருக. உள் நஞ்சு - உள்ளம் நைந்து. அனத்துக் கும் - அன்னத்திற்கும். உம்பர் - தேவர். ஓட்டெடுப்ப - ஓடுமாறு. பண்நஞ்சம் - பண்ணிய நஞ்சை. பச்சைப் பெண் - உமை. பிஞ்ஞகர் - இறைவர்.

77. கங்குல் - இருள். கரும்பகடு - எருமை. முருகு - மணம். பொலம்கொம்பனீர் - பொற்கொடி போன்ற வர்களே.

78. ஐந்து - ஐம்பொறி. நிரைவளையவள் - உமை.

79. தீங்குழற்கானம் - குழலோசை. மானம் நிறை நாண் இவற்றை மதி குயில் குழலோசை ஆகியவை கவர்ந்துணும். மவுலி - முடி.

80. நகிலாண்ட சின்ன இடை - உமை. திருநயனம் செங்கமலம் அன்ன விடை - திருமாலாகிய இடபம்.

81. முத்து ஏறுண்டு - முத்தால் அடிக்கப்பட்டு. பொன் அசும்பு தசும்பு - பொன் ஒளி வீசுகின்ற விமான கலசத்தை. விசும்பு - வானம். இரவி - சூரியன். கஞ்சம் - தாமரை. முருகுயிர்க்கும் - மலரும்.

82. அத்திக்கும் - எலும்புக்கும். கேவலம் - முத்தி; இழிவு. பலம் - பயன்.

83. அல் - இருள். குழல் - கூந்தல். அனங்கன் - மன்மதன்.

84. தானென்றவர் - அகங்காரம் உடையவர். தன்னை இழந்தவர் - அகங்காரத்தை ஒழித்தவர். விட்டொழிந் தார் -கருதினவர். (இப்பாடல் பழிப்பதுபோலப் புகழ்தல்)

85. ஒருவன் - பிரமன். துரகம் - (வேதங்களாகிய) குதிரை. ஆ இடங்கொண்டு - இடபத்தை ஊர்தியாகக் கொண்டு.

86. ஆனந்த வல்லி - விசாலாட்சியம்மை. ஆனந்தக் கானகம் - காசி. அருட்கடல் - விசுவநாதர். ஆடும் - ஆடுவீராகுக.

87. கோரம் - அகோரவடிவு. ஈரம் - அன்பு. வாரம் என் - சொந்தமான குணம் யாது?

88. முளரிக்கணையான் - மன்மதன். திகை - திசை. திக்கு - கதி.

89. போற்று அடிக் கஞ்சம் - போற்றுகின்ற திருவடி யாகிய தாமரை. செருப்படி - கண்ணப்ப நாயனர் காலால் ஊன்றியது. மாற்றடி - பாண்டியன் பிரம்பினுல் அடித்தது. தொண்டர் - அருச்சுனன்.

90. இல்லை என்பதுஇலை - உண்டு. மருங்கு - இடை. எழுதரும்கூற்றம் - எழுந்துவருகின்ற இயமன்; எழு தற்கு அரிய வேதம். பொன் நாகம் - பொன்மலையாகிய மேருவும் பொலிவு பெற்ற ஆதிசேடனுகிய பாம்பும். விடுகணை - திருமால். நாணும் பொன் - நாணுகின்ற திருமகள். ஆகம் - மார்பு. மல்லல் - செழிப்பு. மணி முத்தம் என்பதே - மணியும் முத்தும் ஆக இருப்பது எலும்பே. வாசம் - இருப்பிடம்.

91. பணிக்கும் பணி என் - தாங்கள் இடும் கட்டளை என்ன? பணிக்கும் - பாம்புக்கும். பணிதிக்கு - ஆபரணத் துக்கு. மேக்கு - மேலானது. ஆர் - நிறைந்த. என்பு அணிக்கும் (3ஆவது வரி). என் பணிக்கு (4ஆம் வரி).

92. கேயூரம் - வாகுவலயம். மாயூரம் - மயில்.

மைந்தன் - முருகன். அவ்வேலை - அந்த வேற்படையை. இவ்வேலை - இந்தப் பணியை.

93. குருகை - வளையலை. சுகத்தை - இன்பத்தை. சுகமே - கிளியே. அனமே - அன்னமே. அனம்விடுத்த படி - சோற்றை உண்ணாது இருப்பதை. படிவர் - தவ வேடம் உடையார். உளத்து - உள்ளத்தைப்போல. வரித்தோல் - புலித்தோல்.

94. உடுத்த கலை - ஆடை. ஒழுகும்பணி - செய்யும் வேலை. விரும்பு அணி - விரும்பிய ஆபரணம். தொடுத்த - இசையோடு பாடிய. வளை - வள்ளைப் பாட்டு. பரந்தாமம் - முத்தி. இதழிப் பரந்தாமம் - கொன்றை யாகிய மேலான மாலை.

95. துரகர் - குதிரையையுடையவர். உரகம் - பாம்பு. பரிபுரம் - சிலம்பு. திறம் - (இயமனது) வலிமை. பிழைத்து - தப்பி. தென்புலத்தார்கோ - இயமன். அடிக்கு - தண்டத்துக்கு. அண்டார் - நெருங்கார்.

96. பழுக்காய் - பாக்கு. தாது - குலை. தடங்கோடு - பெரியசிகரம். தெவ் - பகைவன்; மன்மதன். கழை - கரும்பு.

97. மருங்கு - பாகம். மருங்கிலாதவள் - உமை. இவளொருத்தி - கங்கை. நடமிடுஇங்கிவள் - திருமால் ஆகிய மோகினி. பிள்ளை - மகாசாத்தா. நாவளைக்க - பழிகூற. ஆனினம் - பசு. கைதை - தாழை. குண்டு - ஆழமான. ககனம் - ஆகாயம். குடுமி - உச்சி.

98. சரி - முழங்கைக்குமேல் அணியும் வளை. கரவளை - கைவளை; தோணி. அனம் - சோறு. கனம் - மேகம். தீவுஇடமே. வதிதல் - தங்குதல். நந்தினம் - பெருகினோம். சூரல் - சுழித்தல். நந்துஇனம் - சங்கின் கூட்டம். நாவாயே - நாக்கும் வாயும்; படகு. கழுநீரே -

நீர்கழும் - நீர் அவற்றைக் கழுவும். கழுநீரே - கழுநீர்ப் பூக்களே. இதழி வனத் தார் - கொன்றையாகிய அழகிய மாலை. ஆனந்தவனத்தார் - காசிவிசுவநாதர்.

99. வனம் - மயானம். பொற்பொது - சிதம்பரம். சின......கொடி - உமை. அத்தர் - சிவபெருமான். உடைதர - மலர. சுரநதி - கங்கை.

100. அற - மிகவும். அளகம் - கூந்தல். முகடு - உச்சி. ஒருமொழி - பிரணவம். சமயம் - இறக்கும் சமயம். சுரநதி - கங்கை. வளை - சங்கு. முரலும் - ஒலிக்கும்.

101. வீழ் - விழுது. முடவு - வளைவு. பூண் என்றது பாம்பை. கறங்கு - காற்ருடி. வானேறு - இடி. கடுப்ப - போல. வெரிந் - முதுகு. வீரிட - முழங்க. பழுக்காய் - பாக்கு. சுடரோன் செம்மல் - சூரியன் மகனுகிய சுக்கிரீவன். தெசமுகத்தொருவன் - இராவணன். தண்டலை - சோலை. தேம்பிழி - தேன். வேத்தவை - அரச சபை. கவிகை - குடை. புரவு பூண்டு - காத்து. செந்நெறி - முத்தி அடைதற்குரிய வழி.

---

07/17/11/CW/16

1467

181836.

உ

சிவ சிவ

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
## ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
## அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

பொதுமக்களின் அனுகூலத்திற்காக மனமுவந்து நிறுவிய தருமங்கள்

---

| எண் | தரும விவரம் | முதற்பொருள் |
|---|---|---|
| 1. | திருமுறை வளர்ச்சிக்கு 43 தருமங்கள் | ரூ. ... 12,67,900 |
| 2. | கல்வி அபிவிருத்திக்கு 74 தருமங்கள் | ... 38,07,125 |
| 3. | சைவ சித்தாந்தம் பரப்ப 7 தருமங்கள் | ... 1,56,000 |
| 4. | அன்னதானம் செய்ய 155 தருமங்கள் | ... 25,99,500 |
| 5. | வைத்தியஞ் செய்ய 6 தருமங்கள் | ... 4,23,500 |
| 6. | பொது தருமங்கள் - ஸ்நானகட்டம், அகதிகள் நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப் பரிசு, கோசம்வர்த்தனம், படிக்காசு நிதி, கல்லெழுத்து முதலிய 103 தருமங்கள் | ... 12,49,890 |
| | ஆகத் தருமங்கள் 388க்கு | ரூ. 95,03,915 |

உ

# "குமரகுருபரன்"

[தமிழ்த் திங்கள் வெளியீடு]

✶

இது
சைவ சித்தாந்தம்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம்,
பன்னிருதிருமுறை ஆராய்ச்சி, இலக்கியம்,
பிறமொழிகள், கலாசாரம் சம்பந்தமான
கட்டுரைகள் கொண்டது.

✶

நிர்வாக ஆசிரியர்:
**T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A., B.L.,**
மானேஜிங் டிரஸ்டி,
**ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்,**
**நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்,**
**ஸ்ரீவைகுண்டம்.**

ஆண்டுச் சந்தா ரூ. 3-00 தனிப்பிரதி 0-25